# கண்ணோடு கலந்து விடு!



ராஜேஷ்குமார்

## 1

மந்திரா மருத்துவமனை.

கட்டிடத்தின் பிரதான முன்முகப்புச் சுவரில் வெண்ணிற உலோக எழுத்துக்கள் தனித் தனியாய்ப் பதிக்க வைக்கப்பட்டு மாலை நேர சூரிய வெளிச்சத்தில் மின்னிக்கொண்டிருந்தன.

புறநோயாளிகள் பிரிவில் இருந்தார் டாக்டர் சுரேந்திரன். பொன்விழா வயது. ஆனால், நாற்பது வயதுக்குக் குறைவாய் மதிப்பிட வைக்கும் திடகாத்திரமான உடம்பு. கிருதா ஓர நரையை மட்டும் போனால் போகிறதென்று விட்டுவிட்டு மற்ற இடங்கள் பூராவும் மை அடித்துக் கறுப்பாக்கியிருந்தார்.

இருமிக்கொண்டே நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்த வயதான நோயாளியின் புஜத்தில் ஊசியை சொருகியவர், நிமிர்ந்து சுவரில் ஒட்டிக்கொண்டிருந்த கடிகாரத்தைப் பார்த்தார்.

மணி ஏழு ஆகியிருந்தது.

''வசுமதி...''

சுரேந்திரன் குரல் கொடுக்க - கதவைத் திறந்துகொண்டு நர்ஸ் சீருடையில் இருந்த அந்தப் பெண் எட்டிப் பார்த்தாள்.

''என்ன டாக்டர்...?''

''இன்னும் எத்தனை நோயாளிகள் இருக்காங்க...?''

''ஒரே ஒரு நோயாளிதான் டாக்டர்...''

''ஆணா, பொண்ணா...?''

''பொண்ணு...''

''என்ன காரணம்...''

''காய்ச்சல்ன்னு சொல்லிச்சு...''

''உள்ளே நான் இன்னும் சுற்றிப்''

பார்க்கவில்லை. அந்த பொண்ணை அனுப்பிவிட்டு நீ பொது வார்டுக்குப் போ... ஒவ்வொரு படுக்கை நோயாளியின் குறிப்பையும் தயாரா எடுத்து வைச்சிரு..."

"சரி டாக்டர்..."

"கம்பவுண்டர் தீனதயாளன் எங்கே...?"

"நீங்க ஏதோ மருந்து கலக்கச் சொன்னீங்களாம்... பண்ணிகிட்டு இருக்கார்..."

அந்த வயதான நோயாளியைக் காட்டிச் சொன்னார் சுரேந்திரன்.

"இவருக்காகத்தான் ஒரு மருந்து கலக்கச் சொன்னேன்... இவரை தீனதயாளன்கிட்டே கூட்டிட்டுப் போய் மருந்தை வாங்கிக் கொடுத்துடு..."

"சரி டாக்டர்..."

சுரேந்திரன் அந்த நோயாளியைப் பார்த்தார்.

"பெரியவரே... நீங்க போங்க... கம்பவுண்டர் மருந்து கொடுப்பார்... மூணு வேளைக்கும் ஒவ்வொரு ஸ்பூன் சாப்பிடுங்க... ஒரு நேரம்கூட தவறக்கூடாது... அதுக்கப்புறம் இருமல் வந்தா மறுபடியும் என்னை வந்து பாருங்க..."

அந்தப் பெரியவரின் இடுங்கின கண்கள் நன்றியில் பளபளக்க கைகளைக் கூப்பினார்.

"ரொம்ப நன்றிங்கய்யா..."

"நன்றியெல்லாம் இருக்கட்டும்... போங்க... உடம்பை கவனிங்க..."

"வாங்க பெரியவரே..." என்றாள் நர்சு.

அவர் தயங்கினபடியே நின்றிருந்தார்.

சுரேந்திரன் நிமிர்ந்தார்.

"என்ன...?"

"பணம்... எ... எவ்வளவுன்னு சொல்லலீங்களே..."

சுரேந்திரன் பிசகாத பல்வரிசையில் சிரித்தார்.

"நீங்க இந்த மருத்துவமனைக்கு புதுசா...?"

"ஆமாங்க... நீங்க நல்லா மருத்துவம் பார்ப்பீங்கன்னு சொன்னாங்க...!



கேள்விப்பட்டுத்தான் வந்தேன்... இந்தக் காலத்துல எங்கே போனாலும் எரிஞ்சு விழற டாக்டர்கள்தான் இருக்காங்க... உங்களை மாதிரி டாக்டர்கள் அபூர்வம்... பணம் எவ்வளவுன்னு சொன்னீங்கன்னா..."

சுரேந்திரன் குறுக்கிட்டார்.

"நான் வியாதிக்கு இவ்வளவு பணம்ன்னு மருத்துவத்தைக் கூறு போட்டு விக்கறதில்லை பெரியவரே... இந்த சிகிச்சைக்கு எவ்வளவு தரலாம்ன்னு தோணுதோ... அல்லது உங்களால எவ்வளவு முடியுமோ... அதை மருத்துவமனைக்குப் பின்னாடி இருக்கிற கோயில் உண்டியல்ல போட்டுட்டு போங்க. அந்தக் கோயிலும் நான் கட்டினதுதான்..."

அழுக்கு ஜிப்பாவில் கையைத் துழாவியவர் ஒரு ஐந்து ரூபாயையும், கசங்கின இரண்டு ரூபாய்த் தாள்கள் இரண்டையும் வெளியே எடுத்தார்.

"உங்க நல்ல மனசுக்கு நிறைய கொடுக்கணும்ன்னு தோணுது... என்கிட்டே இப்போ ஒன்பது ரூபாதான் இருக்கு டாக்டரய்யா..."

தயங்கினபடியே பெரியவர் சொல்ல - சுரேந்திரன் பெரிதாக சிரித்தார்.

"ஒத்தை ரூபாயை நீங்க போட்டுட்டுப் போனாலும் நான் தப்பா நினைக்கமாட்டேன்... உள்ளே வர்ற நோயாளிகள் நிறைஞ்ச மனசோட வெளியே போகணும்... அதான் என் கொள்கை..."

பெரியவர் மீண்டும் ஒருமுறை 'நன்றி' சொல்லிவிட்டு வசுமதியுடன் வெளியேறினார்.

"பெரியவரே... இந்தப் பக்கம் வாங்க..." என்று இடது பக்கம் கூட்டிச் சென்றாள் வசுமதி.

காத்திருந்த அந்த சல்வார்கமீஸ் பெண்ணிடம், "நீ உள்ளே போம்மா..." என்றாள்.

சல்வார்கமீஸ் மருத்துவரின் அறைக் கதவுக்குள் நுழைய, வசுமதி பெரியவரோடு

கம்பவுண்டர் தீனதயாளனிடம் வந்தாள்.

"என்ன... மருந்தைக் கலக்கியாச்சா?"

பாட்டில் மருந்தைக் குலுக்கிக் கொண்டிருந்த தீனதயாளன் நிமிர்ந்தான்.

"வசுமதியா... வா... வா..."

"டாக்டர் சொன்ன மருந்தைக் கலக்கியிருந்தா அதை இந்தப் பெரியவருக்கு கொடுக்கச் சொன்னார்."

"சீட்டைக் கொடுங்க பெரியவரே..."

அவர் சுரேந்திரன் கிறுக்கித்தந்த சீட்டை எடுத்துத் தர, வசுமதி விடை பெற்றாள்.

"டாக்டர் உள்ளே வரப்போறார்! நோயாளிகள் குறிப்பை எல்லாம் எடுத்து வைக்கணும்... நான் போறேன்..."

"போ... முதல்ல அதைச் செய்... சுற்றிப் பார்க்க வர்றப்போ ஏதாவது சரியில்லைன்னா டாக்டருக்கு கோபம் வந்துடும்..."

வசுமதி வேகமாய் நடை போட்டு பொதுநோயாளிகளின் அறைக்கு வந்தாள்.

சில படுக்கைகள் அருகே உறவினர்கள் கும்பலாய் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

கத்தினாள், வசுமதி.

"இப்படிச் சத்தம் போட்டு பேசிக்கிட்டிருந்தா நோயாளி எப்படி நிம்மதியா தூங்க முடியும்...?"

"ராமசாமி முழிச்சிட்டுத்தாங்க இருக்கான்... அதான் பேசிட்டு இருந்தோம்..."

"உங்க ராமசாமி ஒருத்தர்தான் இங்கே நோயாளியா...? மத்தவங்க எல்லாம் நோயாளி இல்லையா...? ஒரு பெட்டுக்கு ஒருத்தர் மட்டும் துணைக்கு இருங்க... மத்தவங்க எல்லாரும் வெளியே போங்க... இப்போ டாக்டர் வரப்போறார்... கசகசன்னு இருந்தா சத்தம் போடுவார்..."

கும்பல் போட்டிருந்த நபர்கள் முணுமுணுத்துக் கொண்டே வெளியேறிப் போக -



ஒவ்வொரு படுக்கையாய்ச் சென்று நோயாளி குறிப்புகளை சரிபார்த்து அடுக்கி வைத்தாள் வசுமதி.

இரவு சாப்பிட வேண்டிய மாத்திரைகளை இன்னும் சாப்பிடாமல் இருந்த நோயாளிகளை அதட்டி சாப்பிடச் சொன்னாள்.

மணிக்கட்டில் வாட்சைப் பார்த்தாள்.

7.25.

நிம்மதி மூச்சுவிட்டாள்.

இனி டாக்டரின் வேலை அமைதியாக நடக்கும். இந்த முன் ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்றால் வீணாக அவரும் கோபத்தோடு கத்துவார்.

டாக்டர் வருகைக்காக காத்திருந்தவள் மணி 7.35 ஆனபோது - ஆச்சரியப்பட்டாள்.

'டாக்டரை எங்கே காணோம்...?'

'ஒரே ஒரு வெளி நோயாளிதானே...? இவ்வளவு நேரமா ஆகும்?'

வெளியே எட்டிப் பார்த்தாள்.

தீனதயாளனின் மருந்து அறை பூட்டிக் கிடந்தது. அதிகபட்சம் ஏழு மணிக்கு மேல் அவன் இருக்கமாட்டான்.

புறநோயாளி பிரிவு, துடைத்து வைத்தாற்போல் இருந்தது.

'டாக்டரை பார்த்துவிட்டு - அந்த சல்வார்கமீஸ் பெண் இன்னுமா போகவில்லை?'

டாக்டரின் அறைக் கதவருகே சற்றுநேரம் நின்று உள்ளே பேச்சுக்குரல் கேட்கிறதா என்று காதை உன்னிப்பாக்கிப் பார்த்தாள்.

நிசப்தமாய் இருந்தது.

"டாக்டர்... உள்ளே வரலாமா?"

குரல் கொடுத்தாள்.

"........."

பதிலுக்கு நிசப்தம்.

"டாக்டர்... உள்ளே வரலாமா...?" மறுபடி கூப்பிட்டாள்.

உள்ளே - நிசப்தம்.

'நோயாளிகளைப் பார்க்காமலே வீட்டுக்குப் போய் விட்டாரா...? ஏதாவது அவசரம் என்றாலும் சொல்லி விட்டுத்தானே போவார்...?'

கைப்பிடியை அழுத்தினாள் வசுமதி.

கதவு நெகிழ்ந்து - பின்வாங்கித் திறக்க -

நாற்காலியில் தாறுமாறாய் சரிந்துகிடந்தார் டாக்டர் சுரேந்திரன். அணிந்திருந்த வெள்ளைக் கோட்டு இரத்த ஈரத்தில் நனைந்துகிடக்க - தரையிலும் சின்னதாய் ஒரு இரத்தக் குளம் தேங்கிக் கிடந்தது.

---

# 2

---

மருத்துவமனையின் முன்வாசல் படிகளில் தடதட வென்ற காலணி சப்தம்.

காக்கி சீருடைகள் கும்பலாய் மேலேறி வந்தன.

இன்ஸ்பெக்டர் ரத்தினம் நடுநாயகமாய்த் தெரிந்தார். அவருக்கு அருகில் சப்-இன்ஸ்பெக்டர் பாலகுமார்.

ரத்தினம், நர்சு வசுமதியை ஏறிட்டார்.

"போன் பண்ணியது யாரு...?"

"நா... நான்தான் சார்..."

"எந்த அறை...?"

வசுமதி டாக்டரின் அறையைக் காட்ட - வேக நடைபோட்டு உள்ளே வந்தனர். நாற்காலியில் சரிந்துகிடந்த சுரேந்திரனைப் பார்த்த இன்ஸ்பெக்டர் ரத்தினம், சப்-இன்ஸ்பெக்டர் பாலகுமாரை - போலீசு சடங்குகளை நடத்தச் சொல்லிவிட்டு வசுமதியை வராந்தாவிற்கு அழைத்துச் சென்று விசாரணையை தொடங்கினார்.

"உன் பேரு என்ன...?"

"வசுமதி..."



"எத்தனை வருசமா இங்கே வேலை பார்க்கறே...?"

"எட்டு வருசமா..."

"என்ன நடந்தது...?"

வசுமதி இரண்டு நிமிடங்கள் எடுத்துக் கொண்டு நடந்ததை விளக்கினாள்.

ரத்தினம் உன்னிப்பாய் அவள் சொல்பவைகளைச் செவிமடுத்துவிட்டுக் கேட்டார்.

"கடைசியா வந்த நோயாளியை அனுப்பிட்டு நீ பொதுப் பிரிவுக்கு போனபோது மணி என்ன?"

"ஏழு பத்து சார்..."

"யார் அந்த கடைசி நோயாளி..."

"ஒரு பொண்ணு சார்..."

"என்ன வயசு இருக்கும்...?"

"இருபத்தி அஞ்சுக்குள்ளே..."

"அந்தப் பெண் இதுக்கு முன்னால வந்ததில்லையா...?"

"இப்போதான் முதல் தடவையா வர்றா..."

"பேரு, முகவரி எல்லாம் கேட்டுக் குறிச்சிக்கற வழக்கம் இந்த மருத்துவமனையிலே இருக்கா...?"

"இல்லே சார்... டோக்கன் கொடுத்திடுவோம்... டோக்கன் நம்பர்படிதான் உள்ளே அனுப்புவோம்..."

"உள்ளே டாக்டர், நோயாளியோட பேரைக் குறிச்சி வைப்பாரா...?"

"குறிக்கமாட்டார்..."

"இங்கே உன்னைத் தவிர வேற யாரெல்லாம் வேலை செய்யறாங்க...?"

"கம்பவுண்டர் தீனதயாளன்... அப்புறம் பகல் வேலை நர்சு சித்ரா..."

"கம்பவுண்டர் எங்கே...?"

"ஏழு மணிக்கெல்லாம் அவர் வீட்டுக்குப் போயிடுவார்..."

"நீ பொது வார்டுக்குப் போனப்ப

கம்பவுண்டர் இருந்தாரா...?''

''இருந்தார்... ஒரு நோயாளிக்கு மருந்து தரச் சொல்லி அவர்கிட்டே நான் சொல்லிட்டுப் போனேன்...''

''நீ உள்ளே போய் டாக்டர் ரவுண்ட்ஸ் வர ஏற்பாடு பண்ணிட்டு திரும்பிவர எவ்வளவு நேரமாச்சு...?''

''கிட்டத்தட்ட அரை மணி நேரம் ஆகியிருக்கும். ஏழேகால் மணிக்கு உள்ளே போனேன். அநாவசியமா சத்தம் போட்டுட்டிருந்த ஆட்களை விரட்டிட்டு - நோயாளி குறிப்புகளை எடுத்து வைச்சிட்டு காத்திருந்தேன்... இருபது நிமிடத்துக்கு மேல காத்துகிட்டிருந்தேன்... அப்புறம்தான்... 'இன்னும் ஏன் டாக்டரைக் காணலை'ன்னு யோசிச்சிட்டு டாக்டரோட அறைக்கு வந்தேன்... கதவைத் திறந்தா இரத்த வெள்ளத்தில் கிடக்கிறார்...''

''கம்பவுண்டர் தீனதயாளன் எப்போ போனார்னு உனக்குத் தெரியாது... அப்படித்தானே...?''

''ஏழு பத்துக்கு அவர் போயிருக்கலாம்...''

''தீனதயாளனுக்கும், டாக்டருக்கும் இடையில் ஏதாவது பிரச்சினை...?''

''அவருக்கும் டாக்டருக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் இருக்கிற மாதிரி எனக்குத் தெரியலை சார்...''

''உனக்குத் தெரியலை... அப்படித்தானே...?''

''இல்லை... என்னால உறுதியாவே சொல்ல முடியும்! ஏன்னா டாக்டர் எல்லாரையும் அரவணைச்சுப் போகிற குணம்... அவரோட எவ்வளவு பெரிய கோபத்துக்கும் ஆயுசு அஞ்சு நிமிடமோ பத்து நிமிடமோதான்...''

''கொலைங்கறது கணநேர கோபத்திலோ அவமான உணர்ச்சியாலோ கூட ஏற்படலாம்...''

''கம்பவுண்டர் மேல டாக்டருக்கோ டாக்டர்



மேல கம்பவுண்டருக்கோ மனஸ்தாபம் வந்ததே இல்லை சார்...''

''கடைசியா டாக்டரை பார்க்க வந்த நோயாளிப் பெண் யாருன்னு கண்டு பிடிச்சாத்தான் உண்மை தெரியும்ன்னு நினைக்கிறேன்.'' - ரத்தினம் முணுமுணுத்தார்.

''எனக்கும் அந்தப் பொண்ணு மேல்தான் சந்தேகம் சார்...''

வசுமதி சொன்ன விநாடி சப்-இன்ஸ்பெக்டர், பாலகுமார் வேகமாய் அங்கே வந்தார். அவர் முகத்தில் பரபரப்பு.

''சார்...''

''என்ன பாலகுமார்...?''

''டாக்டர் சுரேந்திரன் சாகலை சார்... இன்னும் உயிர் இருக்கு...!

---

# 3

---

தீவிர சிகிச்சைப் பிரிவு!

சில மணி நேர சிகிச்சைக்குப்பின் டாக்டர் சுரேந்திரன் அபாய கட்டத்தைக் கடந்திருந்தார். ஆழமான மயக்கத்திலிருந்தார்.

வெளியே ரத்தினமும், பாலகுமாரும் பொறுமையிழந்து காத்திருந்தார்கள்.

ரத்தினம் வாட்சைப் பார்த்துவிட்டுக் கேட்டார்.

''டாக்டர் சுரேந்திரனுக்கு எப்படியும் மூணு மணி நேரத்தில் உணர்வு வந்திடும்னு சொன்னாங்க இல்லையா...?''

''ஆமா சார்...''

''மூணரை மணி நேரத்துக்கு மேலாயிடுச்சு... டாக்டரைக் கூப்பிட்டு பார்க்கச் சொல்லலாமா...?''

''இன்னும் கொஞ்ச நேரம் பார்ப்போம் சார்...''

பாலகுமார் சொன்ன விநாடி -

தீவிர சிகிச்சைப் பிரிவின் கதவு மெல்ல திறந்தது.

வெளியே வந்த நர்சு -

''இன்ஸ்பெக்டர்... அவருக்கு உணர்வு வந்துடுச்சு...'' என்றாள்.

சட்டென்று அரும்பிக்கொண்ட பரபரப்போடு - இருவரும் வேகமாய் உள்ளே நுழைந்தார்கள்.

அந்த பிரிவின் ஒரு தனி அறையில் படுத்திருந்த சுரேந்திரனை நெருங்கினார்கள்.

சுரேந்திரனின் முகத்தில் களைப்பு கனமாய்ப் படர்ந்திருந்தது. பலவீனமாய்க் கண்களை மலர்த்தி இருவரையும் பார்த்தார். கத்திக்குத்து விழுந்த இடங்களில் நிறைய பஞ்சை வைத்து மருந்து போட்டிருந்தனர். மேற்புறம்வரை இளஞ்சிவப்பாய் இரத்தம் கசிந்திருந்தது.

ரத்தினமும், பாலகுமாரும் கட்டிலுக்கருகே போய் உட்கார்ந்தார்கள்.

ரத்தினம் சுரேந்திரனின் முகத்துக்கருகே குனிந்தார்.

''டாக்டர்... இப்போ எப்படி இருக்கு...?''

''பரவாயில்லை'' - வலியை ஜீரணித்துக் கொண்டு பேசினார் சுரேந்திரன்.

''இப்போ உங்களை விசாரிக்கலாம் இல்லையா...? உங்களுக்குத் தொந்தரவு தர்றோம்னு தெரியும்... இருந்தாலும் வேற வழியில்லை... உங்களைக் கொலை செய்ய முயற்சி பண்ணினது யாருன்னு உடனடியா கண்டுபிடிச்சாகணும்... ஏன்னா மறுபடி அந்த நபர் கொலை முயற்சியைத் தொடரக் கூடும்...''

சுரேந்திரனின் கண்களில் படர்ந்த பயத்தை கவனித்துவிட்டு பாலகுமார் சொன்னார்.

''நீங்க பயப்பட வேண்டாம்... உங்க பாதுகாப்புக்காக போலீஸ் காவல் போட்டிருக்கோம்... அவங்களை மீறி இனிமே உங்களை யாரும் எதுவும் செய்ய முடியாது...''

ரத்தினம் கேட்டார். ''உங்களைக் கொலை செய்ய வந்தது யாரு...?''



''யாருன்னு தெரியலை...''

''உங்களுக்கு அறிமுகமில்லாத ஆளா...?''

''இன்ஸ்பெக்டர்...! என்னைக் கொலை செய்ய வந்தது யாருன்னே எனக்குத் தெரியலை... நான் பார்க்கவே இல்லை... ஆணா, பெண்ணான்னு கூடத் தெரியாது...''

ரத்தினமும், பாலகுமாரும் திகைப்போடு அவரைப் பார்த்தார்கள்.

''அன்னிக்கு நடந்தது என்ன...? விளக்கமா சொல்லுங்க டாக்டர்...''

''நர்சு வசுமதியை பொதுப் பிரிவுக்கு அனுப்பிட்டு கடைசியா வந்த பொண்ணைப் பார்த்து மருந்து எழுதித் தந்தேன்...''

''அந்தப் பொண்ணுக்கு என்ன உடம்புக்கு...?''

''காய்ச்சல் இருந்தது...''

''சரி... சொல்லுங்க...''

''அந்தப் பொண்ணை அனுப்பினதுக்கப்புறம்... நோயாளிகளைப் பார்க்கப் போகணும்னு நினைச்சிட்டே திரும்பினேன்... அப்போ கதவு திறக்கிற சத்தம் கேட்டது. வேகமாகக் காலடிச் சத்தம்... வளையல் சத்தம் கேட்டது... அந்தப் பொண்ணு மறுபடியும் வர்றாளோன்னு நினைச்சு நான் திரும்பிப் பார்க்க முயற்சி செய்ய - திரும்பறதுக்கு முன்னாலேயே முதுகில் கத்திக்குத்து விழுந்தது...''

''அப்படீன்னா கொலையாளியை நீங்க பார்க்கவே இல்லையா...?''

''இல்லை... வலி தாங்கமுடியாம நான் உடனடியா மயக்கமாயிட்டேன்...''

''வளையல் சத்தம் கேட்டதுன்னு சொன்னீங்க... வந்தது அதே பொண்ணா இருக்கலாமா...?''

''அந்தப் பொண்ணா இருந்தா என்னைப் பார்த்தபோதே குத்தியிருக்கலாமே... ஏன் வெளியே போயிட்டு வரணும்...?''

''அதுக்கு காரணம் இப்படி இருக்கலாம்...''

''எப்படி...?''

''அந்தப் பொண்ணு உள்ளே வந்து ரொம்ப நேரம் ஆச்சு... வெளியே நிலவரம் என்னான்னு பார்த்துட்டு பிறகு உள்ளே திரும்பிவந்து உங்களைக் குத்தி இருக்கலாம்...''

''நீங்க சொல்றது ஏத்துக்கற மாதிரிதான் இருக்கு... ஆனால், அந்தப் பொண்ணு என்னை ஏன் கொலை செய்ய நினைக்கனும்...?''

''இந்தக் கேள்விக்கு பதிலை நீங்கதான் சொல்லணும்...''

''எனக்கு இது புரியாத புதிரா இருக்கு இன்ஸ்பெக்டர்... எனக்கு எதிரிகளே யாரும் இல்லைன்னு என்னால உறுதியா சொல்ல முடியும்... இந்த மருத்துவமனையை சேவை மனப்பான்மையோடதான் நான் நடத்திட்டு வர்றேன்...''

ரத்தினம் சிரித்தார்.

''உங்களுக்கு நேரடி எதிரிகள் இல்லாம இருக்கலாம்... ஆனால், மறைமுக எதிரிகள் நிச்சயம் இருப்பாங்க...''

''மறைமுக எதிரிகளா...?''

''எப்பேர்ப்பட்ட நல்ல மனுசனுக்கும் மறைமுக எதிரிகள் இல்லாம இருக்கமாட்டாங்க... காந்திக்கு கோட்சே இருந்த மாதிரி...''

''என்மேல யாருக்கு என்ன கோபம் இருக்கப் போகுது இன்ஸ்பெக்டர்...? சிலபேர் மாதிரி நான் நோயாளிகளிடம் கட்டணம் என்கிற பேர்ல காசைக் கொள்ளை அடிக்கறதில்லை... ரொம்ப முடியாத பலருக்கு இலவசமாகவே சிகிச்சை கொடுத்து இருக்கேன்...''

''உங்களுக்கு எதிரிகள் உருவாக இந்த ஒரு காரணமே போதும் டாக்டர்...''

''என்ன சொல்றீங்க...?''

''இன்னிக்கு பல டாக்டர்கள்... மருத்துவமனைங்கிற பேரை வைச்சிகிட்டு கொள்ளை அடிச்சிட்டு இருக்காங்க...



அவங்களுக்கெல்லாம் உங்கமேல எரிச்சலும் கோபமும் ஏற்பட்டிருக்கலாம் இல்லையா...?''

''அப்படி ஒரு கோணம் இருக்கிறதை நான் யோசிக்கலை...''

''கடைசியா வந்த பொண்ணோட அட்ரசு தெரியுமா?''

''அந்தப் பொண்ணு மேலே சந்தேகப்பட வேண்டிய அவசியமில்லை இன்ஸ்பெக்டர்... ஏன்னா அதுக்கு நிஜமாவே நூத்திரெண்டு டிகிரி காய்ச்சல் இருந்தது...''

''சந்தேகப்பட்டாலும், படலைன்னாலும் அந்தப் பொண்ணை நாம விசாரிச்சே ஆகணும் டாக்டர்... ஏன்னா கடைசியா உங்களைப் பார்த்துட்டுப் போனது அந்தப் பொண்ணுதான்... அந்தப் பொண்ணு கொலை முயற்சி செஞ்சிருக்க வாய்ப்பில்லைன்னா... கொலை செய்ய முயன்ற நபரைப் பார்த்திருக்க சான்ஸ் இருக்கு... அதனால அந்தப் பொண்ணை விசாரிக்கவேண்டியது முக்கியம்...''

''முகவரி எனக்கு தெரியாது... ஆனால், பேச்சுக்கிடையே அந்தப் பொண்ணு எங்கே இருக்குன்னு சொல்லிச்சு...''

''எங்கே...?''

''இதய சிகிச்சை நிபுணர் நாராயணன் தெரியுமா...?''

''தெரியும்...''

''அவரோட வீட்டுக்கு எதிரிலோ, பக்கத்திலோதான் அந்தப் பொண்ணோட வீடு இருக்கிறதா சொல்லிச்சு...''

''பொண்ணு பேர் என்ன?''

''மருந்துச்சீட்டுல எழுதித் தந்தேன்... சாந்தான்னு நினைக்கிறேன்...''

''போதும்... இந்த விவரம் போதும்... அந்தப் பொண்ணைக் கண்டுபிடிச்சிடலாம் டாக்டர்...'' - ரத்தினம் எழுந்தார்; பாலகுமார் தொடர்ந்தார்.

''ரொம்ப நன்றி டாக்டர்... நல்லா ஓய்வு

எடுங்க! சீக்கிரமா குணமாயிடுவீங்க... தேவைப்பட்டா நாங்க உங்களை தொடர்புகொள்றோம்...''

சுரேந்திரன் மெதுவாய்த் தலையசைத்து விடை கொடுத்தார்.

இருவரும் வெளியே வந்தனர்.

நடக்கத் தொடங்கியபோது பாலகுமார் தயக்கத்தோடு நின்றார்.

''சார்... ஒரு நிமிடம்...''

''என்ன...?''

பாலகுமார் அங்கே கதவுக்கருகே ஓரமாய் வைக்கப்பட்டிருந்த அந்த வண்ணமயமான மலர்க்கொத்தை நோக்கிச் சென்றார்.

கண்ணாடி காகிதத்தால் சுற்றப்பட்டிருந்த அதை கவனமாய் எடுத்து ரத்தினத்திடம் காட்டினார்.

''யாருக்கு வந்ததோ...? இப்படி அநாதையா இருக்கு...''

அதன்மேல் ஒட்டப்பட்டிருந்த அட்டையைக் காட்டினார் பாலகுமார்.

அதில் கொட்டை கொட்டையாய் ஸ்கெட்சில் தீட்டப்பட்ட எழுத்துக்களில்,

**'டாக்டர் சுரேந்திரன் அவர்களுக்கு'** - என்றிருந்தது.

''டாக்டர் சுரேந்திரனுக்கு வந்திருக்கு...''

''ஏன் வாசல்லேயே வைச்சிட்டுப் போயிட்டாங்க...?''

''கூடவே ஒரு கடிதமும் வைச்சிருக்காங்க சார்...''

''ஆமா... என்னான்னு பாருங்க...''

''அவருக்கு கொடுக்கணும்னு யாராவது நினைச்சிருந்தா... நாம விசாரணையை முடிக்கிறவரைக்கும் காத்திருந்து அப்புறமா கொடுக்கணும்... அல்லது அவசரமாப் போக வேண்டியிருந்தா நர்ககிட்டேயோ அல்லது வேற பொறுப்பான ஒரு நபர்கிட்டேயோ தந்துட்டுப்



போகணும்... இப்படி சுவரோரமா வைச்சிட்டுப் போயிருக்கிறது நெருடலா இல்லையா?''

''இந்த லெட்டரைப் படிச்சிப் பார்த்தா மலர்கொத்தை வைச்சிட்டுப் போனது யாருன்னு தெரியலாம்.''

''இது டாக்டருக்கு வந்தது. அவர்கிட்டேயே கொடுத்து படிக்கச் சொல்லுவோம் சார்...''

கதவைத் தள்ளிக்கொண்டு மீண்டும் உள்ளே சென்றார்கள்.

காலடிச் சத்தம் கேட்டு கண்களைத் திறந்த சுரேந்திரன்... அவர்களைக் குழப்பமாய் பார்க்க -

பாலகுமார் அந்த மலர்க்கொத்தை அவரிடம் நீட்டினார்.

''உங்க பேருக்கு ஒரு மலர்க்கொத்தும் லெட்டரும் வந்திருக்கு டாக்டர்...''

''யார் அனுப்பியிருக்கா...?''

''தெரியலை... வெளியே கதவுக்குப் பக்கத்தில் சுவரோரமா யாரோ வைச்சிட்டுப் போயிருக்காங்க...''

சுரேந்திரனின் முகத்தில் குழப்பத்தின் தடயங்கள் பதிவாயின.

''எங்கே லெட்டரைக் கொடுங்க பார்க்கலாம்...''

பாலகுமார் மடிக்கப்பட்ட உறையை பிரித்து எடுத்தார். உள்ளே இருந்த தாளில் -

சிவப்பு மையில் கிறுக்கலான எழுத்துக்கள் ஓடியிருந்தன.

**''நீ சாக வேண்டியவன்!**

**பிழைத்துக் கொண்டாய்! இனி ஏதாவது ஒரு நாளில் - ஏதாவது ஒரு நிமிடத்தில் நீ சாவாய். அடுத்த தடவை உனக்கு மலர்க் கொத்து கிடையாது. மலர்வளையம்தான்.**

**இப்படிக்கு,**
**உன்னால்**
**சந்தோஷத்தை தொலைத்தவள்.''**

## 4

டாக்டர் சுரேந்திரன் முகம் நிறைய குழப்பத்தை சுமந்து கொண்டு அந்த கடிதத்தை இன்ஸ்பெக்டர் ரத்தினத்திடம் நீட்டினார். அவர் வாங்கிப் படித்துவிட்டு தாடையைத் தடவினார்.

''சந்தோஷத்தைத் தொலைத்தவள்ன்னு எழுதியிருக்கறதைப் பார்த்தா உங்களாலே அவள் பாதிக்கப்பட்ட பெண் மாதிரி தெரியுது... டாக்டர்...''

''நான் முடிஞ்சவரைக்கும் எல்லாருக்கும் நல்லதுதான் செஞ்சிட்டு வர்றேன்... என்னால யாருமே பாதிக்கப்பட்டு இருக்கமாட்டாங்க...''

சற்றே ஊடுருவலாய் சுரேந்திரனைப் பார்த்த ரத்தினம் லேசாக கெட்டித்துக்கொண்ட குரலில் சொன்னார்.

''நீங்க முடிஞ்சவரைக்கும் எங்ககிட்டே வெளிப்படையாப் பேசறது நல்லது டாக்டர்... நீங்க எதையாவது மறைச்சீங்கன்னா நாங்க கொலையாளியைக் கண்டுபிடிக்கறதில் சிரமம் ஏற்படும்... அது ஒருவகையில் அந்த கொலையாளிக்கு சாதகமா போயிடும்...''

''நான் எதையும் மறைக்கலை இன்ஸ்பெக்டர்...''

''உங்களைக் கொலை செய்ய முயன்றதன் பின்னணியில் ஏதோ ஒரு பெண் விவகாரம் இருக்குன்னு நல்லாத் தெரியுது... அந்தரங்கமான கேள்விகளைக் கேக்கறதுக்காக மன்னிக்கணும்... உங்களுக்கு எந்தப் பெண்ணுடனாவது தொடர்பு இருக்கா...?''

சுரேந்திரன் முகத்தில் அதிர்ச்சி காட்டினார்.

''இ... ன்... ஸ்... பெக்டர்...''

''தயக்கமில்லாம சொல்லிடுங்க... நீங்க



சொல்ற தகவல்களை நாங்க இரகசியமா வைச்சிக்குவோம்...''

''இன்ஸ்பெக்டர்... என்னைக் கொலை செய்யற அளவுக்கு என்ன தப்புப் பண்ணினேன்னு ஏற்கனவே நான் குழம்பிப் போயிருக்கேன்... எனக்கு ஒண்ணுமே புரியலை...! நான் தனிக்கட்டை இன்ஸ்பெக்டர்... ஒரு குழந்தையைப் பெத்துக்கறதுக்கு முன்னாலேயே என்னோட மனைவி ஒரு விபத்தில் இறந்துட்டா... அப்பயிருந்து மருத்துவமனையே கதின்னு இருக்கேன்... வேற எதிலும் என்னை நான் திசை திருப்பிக்கலை...''

''மனைவி இல்லாத வெறுமையை நிரப்ப ஒருவேளை...'' ரத்தினம் குரலை லேசாய் இழுக்க - பாதியில் இடை மறித்தார் சுரேந்திரன்.

''நான் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டவன் இன்ஸ்பெக்டர்... அவளோட இடத்தை வேற யாராலும் நிரப்ப முடியாது...''

''உங்களால சந்தோஷத்தை தொலைத்தவள்ன்னு எழுதியிருக்காளே?''

''எனக்கும் அது புரியலை...''

''இந்தக் கையெழுத்து உங்களுக்கு தெரிந்ததா இருக்கா...?''

''இல்லை...''

''இந்தக் கடிதமும், உறையும் எங்ககிட்டயே இருக்கட்டும்... இதை வைச்சுகிட்டு அந்தப் பெண் யாருன்னு கண்டுபிடிக்க முயற்சி பண்றோம்...''

டாக்டரிடம் விடை பெற்று - இருவரும் வெளியே வந்தார்கள். ரத்தினம் குரலைத் தாழ்த்தினார்.

''பாலகுமார்...''

''சார்...?''

''இங்கிருந்து பார்த்தால் புறநோயாளி பிரிவு தெரியுது இல்ல!''

''ஆமா சார்.''

''அங்கே இருக்கும் நர்சு மலர்க்கொத்து

கொண்டு வந்து வைச்சுட்டுப்போன பெண்ணைப் பார்த்திருக்க வாய்ப்பு இருக்கா?''

''இருக்கலாம் சார்.''

அங்கே பகல் வேலை நர்சு சித்ரா சுறுசுறுப்பாய்த் தெரிந்தாள்.

''விசாரிச்சுப் பார்த்துடலாம்.''

இவர்கள் நெருங்கியதும் சின்ன நெற்றி சுருங்க நிமிர்ந்து பார்த்தாள் சித்ரா.

''ஒரு சின்ன விசாரணை...''

''சொல்லுங்க சார்.''

''இங்கிருந்து தீவிர சிகிச்சைப் பிரிவு வரை உன்னால பார்க்க முடியும் இல்லையா?''

''முடியும் சார்.''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் ஒரு பொண்ணு அங்கே கதவுக்குப் பக்கத்தில் டாக்டர் பேரெழுதி ஒரு மலர்க்கொத்தை வைச்சிட்டுப் போயிருக்கு... அந்தப் பொண்ணு இந்த வழியாத்தானே போயிருக்க முடியும்?''

''ஆமா சார்.''

''அந்தப் பொண்ணை நீ பார்த்தியா?''

''பார்க்கலை சார்.''

''யோசனை பண்ணிச் சொல்லும்மா.''

''இல்ல சார்... நான் பார்க்கலை.''

''மருத்துவமனையில் நடந்த டாக்டர் கொலை முயற்சியின் பின்னணியில் ஒரு பெண் இருக்கலாம்ன்னு சந்தேகப்படறோம்.''

சொல்லிக்கொண்டே பாலகுமார் அந்தக் கடிதத்தையும், அட்டையையும் காட்டினார்.

''இந்தக் கையெழுத்தை இதுக்கு முன்னால் பார்த்திருக்கிறாயா?''

அவள் பார்த்துவிட்டு தலையாட்டினாள்.

''இல்ல சார்.''

இதற்குமேல் அவளை விசாரிப்பதில் பயனில்லை என்று உணர்ந்து நகர முற்பட்டபோது அவள் சொன்னாள்.

''நீங்க கேட்ட கேள்விகளுக்கு என்னால் பதில்



சொல்ல முடியலைன்னாலும் வேற ஒரு உபயோகமான தகவல் உங்களுக்கு சொல்ல முடியும் சார்...''

இருவரும் அவளை நிமிர்ந்து பார்த்தார்கள்.

''என்ன தகவல்?''

''அந்த மலர்க்கொத்தை எங்கே வாங்கியிருப்பாங்கன்னு தெரிஞ்சா அது உங்களுக்கு ஓரளவு உபயோகமான தகவலா இருக்குமே சார்?''

''அது எங்கே வாங்கியதுன்னு உனக்குத் தெரியுமா?''

தலையசைத்தாள் சித்ரா.

''தெரியும் சார்... தீபா அங்காடியில் முதல் மாடியில் ஒரு வாழ்த்து அட்டை கடை இருக்கு... அங்கேதான் இதை வாங்கியிருக்காங்க.''

''எப்படிச் சொல்றே?''

''டாக்டரோட பேர் எழுதி வைச்சிருக்கும் இந்த அட்டையின்கீழ் ஓரத்தில் **'வேதா'**ன்னு போட்டு இருக்கு பாருங்க... ரொம்ப விலை உயர்ந்த அட்டை... அங்கேதான் கிடைக்கும்.''

ரத்தினம் பாலகுமாரை ஏறிட்டார்.

''இந்த தகவலை வைச்சு ஆள் யாருன்னு கண்டுபிடிக்க முடியுமா பாலகுமார்? அந்த கடைக்கு எத்தனையோ பேர் வருவாங்க போவாங்க...''

சித்ரா குறுக்கிட்டாள்.

''அந்த கடையில் எல்லாமே மூணு மடங்கு, நாலு மடங்கு விலை அதிகமாக இருக்கும் சார்... பெரும்பாலும் பணக்காரங்கதான் அங்கே வாங்குவாங்க. அடிக்கடி போறவங்களாத்தான் இருப்பாங்க... மலர்க்கொத்து விற்பனை அதிகம் இருக்காது... அதனால் கண்டுபிடிக்க முடியும்னுதான் எனக்குத் தோணுது...''

''முயற்சி செய்வோம்.''

வெளியே வந்து மோட்டார் சைக்கிளில் கிளம்பினார்கள்.

''டாக்டர் சுரேந்திரன்கிட்டே இராத்திரி

கடைசியா வந்துபோன பொண்ணு சாந்தா... அப்புறம்... இப்போ கதவுக்குப் பக்கத்தில் மலர்க்கொத்து வைச்சிட்டுப் போன பொண்ணு... இவங்க ரெண்டு பேரையுமே விசாரிக்கணும்."

"சாந்தா எங்கிருக்காள்னு நமக்குத் தெரியும். மலர்க் கொத்தை வைச்சிட்டுப் போன பொண்ணைத்தான் நாம மொதல்ல கண்டுபிடிக்கணும் சார்..."

"அப்படின்னா நீங்க இப்போ தீபா அங்காடிக்குப் போங்க பாலகுமார்."

மோட்டார் சைக்கிள் விரைந்தது. மருத்துவமனையில் இருந்து புறப்பட்ட பத்தாவது நிமிடம் அந்தக் கட்டிடத்தின் முன்னால் மோட்டார் சைக்கிள் போய் நின்றது.

லிஃப்டில் ஏறி இறங்குவது முகப்புக் கண்ணாடியில் தெரியும்படி அந்த பிரமாண்டமான கட்டிடத்தை வடிவமைத்து இருந்தார்கள். பழுப்புநிற பளிங்குக் கற்கள் கட்டிடத்தின் எல்லா திசைகளிலும் பாளம் பாளமாய்ப் பதிக்கப்பட்டிருந்தன.

மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு கட்டிட்த்தின் படிகளில் ஏறினார்கள் பாலகுமாரும், ரத்தினமும்.

முதல் தளத்தில் இருந்தது அந்த வாழ்த்து அட்டை கடையின் காட்சி அறை. முன்புறக் கண்ணாடி பூராவும் வண்ணமயமாய் அட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. மற்றொருபுறம் பரிசுப் பொருட்கள். இடதுபக்கம் மலர்க்கொத்துக்கள்.

ரத்தினமும், பாலகுமாரும் கடைக்குள் நுழைந்தார்கள்.

காக்கி சீருடையைக் கண்டவுடன் அங்கே இருந்த பணம் பெறும் நபர் எழுந்து நின்றார்.

"சார்..."

"ஒரு சின்ன விசாரணை..."

"கேளுங்க சார்."

ரத்தினம், மருத்துவமனையில் இருந்து



கொண்டுவந்த அந்த மலர்க்கொத்தைக் காட்டி விபரம் சொல்ல -

அந்த நபர் அதில் இணைக்கப்பட்ட அட்டையை வாங்கிப் பார்த்துவிட்டு தலையாட்டினார்.

"ஆமா சார்! இதை இங்கிருந்து வாங்கிட்டுப் போயிருக்காங்க."

"இதை வாங்கிட்டுப் போனது யாருன்னு சொல்ல முடியுமா?"

அவர் உள்பக்கம் பார்த்து குரல் கொடுக்க - ஒரு பையன் ஓடிவந்தான். அவனிடம் கேட்டார். "இன்னிக்கு மலர்க்கொத்து எத்தனை வியாபாரம் ஆச்சு?"

"எட்டு சார்."

அந்த நபர் ரத்தினத்தையும், பாலகுமாரையும் பார்த்தார்.

"எட்டு பேர் வாங்கிட்டுப் போயிருக்காங்க சார். நீங்க குறிப்பிடற மலர்க்கொத்தை யார் வாங்கியிருப்பாங்கன்னு எப்படிச் சொல்ல முடியும்?"

"அந்த எட்டு பேர்ல உங்களுக்குப் பரிச்சயமானவங்களை மட்டுமாவது ஞாபகப்படுத்திச் சொல்லுங்க. பலர் உங்களோட வழக்கமான வாடிக்கையாளரா இருப்பாங்க இல்லையா?"

அவர் ஏதோ சொல்ல வந்த விநாடி - அந்த பையன் குறுக்கிட்டான்.

"இதை வாங்கிட்டுப் போனது யாருன்னு எனக்குத் தெரியும் சார்."

"யார் தம்பி?"

"இன்னிக்கு விற்றதில் இது ஒண்ணைத் தவிர மீதி எல்லாமே புதுசா வந்ததில் இருந்து எடுத்துத் தந்தது சார்... விலையைக் குறைக்கறதுக்காக குறைவான பூக்கள் கோர்க்கப்பட்டிருக்கு."

"உம்... சொல்லு."

"இந்த மலர்க்கொத்தை வாங்கினது ஜமுனாங்கற பொண்ணு சார்... 7755 என்கிற எண்ணுள்ள மாருதி காரில் வரும்..."

---

## 5

---

தொலைபேசிக் கூண்டில் இருந்து வெளியே வந்தார் பாலகுமார். மோட்டார் சைக்கிள் அருகே காத்திருந்த ரத்தினத்தை நெருங்கிச் சொன்னார்.

"கார் எண்ணை வைச்சு போக்குவரத்து ஆபீசில் விசாரிச்சேன் சார்... அந்தப் பொண்ணோட விலாசம் தெரிஞ்சிடுச்சு..."

"எங்கிருக்கு வீடு?"

"ரேஸ்கோர்ஸ்."

"நேரா அந்தப் பொண்ணு வீட்டுக்குப் போங்க!"

மோட்டார் சைக்கிளை விரட்டினார் பாலகுமார். சில நிமிடங்களில் ரேஸ்கோர்சின் நடுவில் இருந்த அந்த பங்களாவைத் தொட்டார்கள். வாசலில் கூர்க்கா சின்னக்கதவு வழியே பார்த்தான்.

ரத்தினம் கேட்டார்.

"ஜமுனா வீடு இதுதானே?"

"ஆமா சார்."

"கதவைத் திற."

அவன் தயக்கத்துடனே இரும்புக் கதவைத் திறந்தான்.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள். சிமிண்ட் தரையில் நடந்தார்கள். கறுப்பு வண்ணம் பூசப்பட்ட இடுப்புயர மண்ஜாடிகளில் பணக்காரச் செடிகள் பச்சையாய்ச் சிரித்தன.

அழைப்புமணி பொத்தானைத் தட்டினார் ரத்தினம்.



உள்ளே மணிச் சத்தம் நெடுநேரத்துக்கு கேட்டது. கதவு திறக்கப்பட்டது.

'வயலட்' நிறத்தில் சல்வார் கமீஸ் அணிந்திருந்த ஒரு பெண் இவர்களைப் பார்த்ததுமே கண்களில் பயத்தை நிரப்பிக் கொண்டாள்.

"நீங்கதான் ஜமுனாவா?"

"அ... ஆமா..."

"உங்ககிட்டே கொஞ்சம் பேசவேண்டி இருக்கு..."

"வ... வாங்க... எ... என்ன பேசணும்?"

வீட்டின் உள்ளே சென்ற இருவரும் ஆளை விழுங்கும் மெத்தென்ற சோபாவில் அமர்ந்தபடியே கேட்டனர்.

"டாக்டர் சுரேந்திரனை உங்களுக்குத் தெரியுமா?"

"எ... எதுக்காகக் கேக்கறீங்க?"

அவள் குரல் உடைந்திருந்தது.

"எதுக்காகக் கேக்கறோம்னு உங்களுக்கே தெரியும். நீங்க அவருக்கு அனுப்பின மலர்க்கொத்து வாழ்த்து கிடைச்சது... அதைப்பற்றி விசாரிக்கத்தான் வந்திருக்கோம்..."

"அது... அது..."

" 'அதெல்லாம் எனக்குத் தெரியாது'ன்னு சொல்லி நீங்க மறுக்க முடியாது... தீபா அங்காடியில் உள்ள வாழ்த்து அட்டை கடையில் இருந்து அந்த மலர்க்கொத்தை வாங்கிட்டுப் போனது நீங்கதான்னு கடைப் பையன் தெளிவா சொல்லிட்டான்..."

ஜமுனா திக்கித்து நின்றாள்.

பாலகுமார் தொடர்ந்தார்.

"நேரடியா விசயத்துக்கு வர்றோம்... டாக்டர் சுரேந்திரனுக்கும், உங்களுக்கும் என்ன விரோதம்? அவரை எதுக்காகக் கொலை செய்ய முயற்சி செஞ்சிங்க?"

அவள் அதிர்ச்சியுடன் மிரண்டாள்.

"நா... நான் ஒண்ணும் அவரைக் கொலை செய்ய முயற்சிபண்ணலையே..."

"பின்னே அந்தக் கடிதத்துக்கு என்ன அர்த்தம்?"

பதட்டத்தில் வியர்த்துப் போயிருந்த ஜமுனா மெல்லச் சொன்னாள்.

"இன்ஸ்பெக்டர்... சில உண்மைகளை நான் சொல்லிடறேன். ஆனா இப்போ இல்லை. சாயந்தரம் ஏதாவது ஒரு இடத்தில் சந்திச்சுப் பேசலாம்..."

"ஏன்?"

"நல்லவேளையா என்னோட அம்மா, அப்பா கோயிலுக்குப் போன நேரத்தில் நீங்க வந்திருக்கீங்க... அவங்க எந்த நிமிசமும் வந்துடுவாங்க... அவங்களுக்குத் தெரியக்கூடாத அந்தரங்கமான விசயத்தைத்தான் உங்ககிட்டே சொல்லணும்..."

"சாயந்தரம் வரைக்குமீ பொறுமை காக்க நாங்க தயாரா இல்லை. உங்க அம்மா, அப்பா வந்தால் எதையாவது சொல்லி சமாளிச்சிக்கிறோம். நீங்க சொல்லப்போற உண்மைகளை உடனடியா தெரிஞ்சிக்க விரும்பறோம். ஒரு கொலைகாரனுக்கு ஆதரவா கடிதம் எழுதி வைச்சிருக்கீங்க... அது எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா?"

"அந்த டாக்டர் ஒண்ணும் ஒழுக்கசீலர் இல்லை சார்... அவர் கொலை செய்யப்பட வேண்டியவர்னுதான் நான் சொல்லுவேன்... பெரிய மனுசன்ங்கிற போர்வையில் இருந்துகிட்டு தப்பு செய்யற இவரைப் போன்ற ஆட்களைக் கண்டதுண்டமா வெட்டிப் போட்டாலும் தப்பில்லை... ஆனா போலீசும், அரசாங்கமும் அந்த மாதிரி போலி மனிதர்களுக்குப் பாதுகாப்பா இருந்துகிட்டிருக்கு..."

தன்னைமீறிய ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும் படபடத்தாள் ஜமுனா.



"என்ன சொல்றீங்க?"

"ஆறு மாசத்துக்கு முந்தி அவரைக் கொலை செய்யணும்ங்கற அளவுக்கு அவர்மேல எனக்கு ஆத்திரம் இருந்தது. ஆனா கொலை செய்யற அளவுக்குத் தைரியம் இல்லை... இப்போ யாரோ ஒருத்தர் அதை செய்யறாங்கங்கறப்போ எனக்கு சந்தோஷமாயிடுச்சு... அதனாலதான் மலர்க்கொத்தைக் கொண்டு போய் வைச்சேன்... நல்ல மனுசங்களுக்குத்தான் நல்ல சாவு வரும்... இவரைப் போல மோசமான ஆட்களுக்கு மோசமான சாவுதான் வரும்... அதனால 'சீக்கிரமே செத்துப்போயிடுவே'ன்னு சபிச்சு அதை வைச்சிட்டு வந்தேன்... யார் வைச்சாங்கன்னு கண்டுபிடிக்க முடியாதுன்னு நினைச்சேன்... ஆனா நீங்க என் வீடு தேடி வந்துட்டீங்க..."

"அப்படி என்ன தப்புப்பண்ணிட்டார் டாக்டர் சுரேந்திரன்?"

"சமூகசேவைங்கற பேருலே மருத்துவமனை நடத்திகிட்டு - அதை வைச்சே பின்னணியில் சட்டவிரோதமாகப் பணம் சம்பாதிச்சிட்டிருக்கார்..."

சொன்ன ஜமுனாவைத் திகைப்புடன் பார்த்தார்கள்.

"புரியும்படி விளக்கமா சொல்லுங்க."

"டாக்டர் சுரேந்திரன் ஒரு 'மிரட்டல்' ஆசாமி... அவர்கிட்டே மாட்டிகிட்டு தினம் தினம் செத்துகிட்டிருக்கிற இளம்பெண்கள் நிறைய இருக்காங்க... அவங்கள்ல ஒருத்தர்தான் தைரியமா கொலை செய்ய முயற்சி செஞ்சிருக்கணும்..."

"இளம்பெண்களை மிரட்டுகிறாரா... எதுக்காக?"

"அவரோட மருத்துவமனைக்குப் போய் கருச்சிதைவு பண்ணிக்கிற பணக்காரப் பொண்ணுங்களை மிரட்டிப் பணம் பறிக்கிறது அவரோட தொழில் இன்ஸ்பெக்டர்..."

"நீங்க...?"

"ஆமா... நான் ஒருத்தனை நம்பி மோசம் போயிட்டேன்... அப்புறம் வீட்டுக்குத் தெரியாம டாக்டர் சுரேந்திரனோட மருத்துவமனையில் சேர்ந்து வயிற்றைக் கழுவிகிட்டேன்... அதுக்கப்புறம்தான் அவர் சுயரூபம் தெரிஞ்சது... **'வீட்டுல சொல்லிடுவேன்... இரகசியமா வயிற்றைக் கழுவிக்கிட்டதை ஊரறிய அம்பலப்படுத்திடுவேன்'**னு மிரட்டி என்கிட்டே ஏறக்குறைய பதினைஞ்சாயிரம் வரைக்கும் பறிச்சிட்டார் இன்ஸ்பெக்டர்..."

"நம்பவே முடியலையே..."

"திருடன்னா அழுக்கு பனியனோடவும், பரட்டைத் தலையோடவும் இருப்பான்கறதெல்லாம் அந்தக்காலத்து அடையாளங்கள்... இந்தக்காலத்தில் திருட்டும் பகட்டான வேலையா மாறிடுச்சு... நல்ல வேலை பார்க்கிறவங்க கூட மனசாட்சியைத் தூக்கி ஓரமா வைச்சிட்டு சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபடத் தயங்கறதில்லை சார்..."

"நீங்க சொல்றதுக்கு ஏதாவது ஆதாரம் இருக்கா?"

உதட்டைப் பிதுக்கினாள் ஜமுனா.

"இல்லை."

"பணத்தை மருத்துவமனையில் கொண்டுபோய்க் கொடுத்தீங்களா?"

"அவர் படிச்சவர் இல்லையா... யாராவது போலீசுடன் வந்துட்டா கையும் களவுமா மாட்டிக்கக் கூடாதுங்கறதுக்காக ரொம்ப ஜாக்கிரதையா திட்டம் போட்டு வைச்சு இருக்கார்... போன்ல மிரட்டுவார்... பணத்தை மருத்துவ மனைக்குப் பின்னாடி இருக்கும் விநாயகர் கோவில் உண்டியல்ல போடச் சொல்லிடுவார்... அது மருத்துவ மனைக்குச் சொந்தமான கோவில்... அந்த உண்டியலின் சாவி டாக்டர்வசம்தான் இருக்கு..."



சொல்லி முடித்த ஜமுனா கெஞ்சும் குரலில் தொடர்ந்தாள்.

"நேருக்கு நேரா நீங்க வந்து நின்னதும் என்னால எதையும் மழுப்ப முடியலை... எல்லா உண்மைகளையும் சொல்லிட்டேன்... தயவுசெஞ்சு இந்த விசயங்களை இரகசியமா வச்சுக்கிங்க இன்ஸ்பெக்டர்... அவமானத்துக்குப் பயந்துதான் டாக்டருக்கு பணம் கொடுத்தேன்... இந்த விசயம் வெளியே தெரியக்கூடாது சார்..."

அவள் சொன்ன விநாடி - வெளியே கார் சத்தம்.

ரத்தினமும், பாலகுமாரும் திரும்பிப் பார்க்க - ஜமுனாவின் அம்மாவும், அப்பாவும் வந்துகொண்டிருந்தார்கள்.

---

## 6

---

பாலகுமார் மோட்டார் சைக்கிளில் சாலைப் போக்குவரத்தை ஊடுருவிச் செல்ல, பின்னால் இருந்த ரத்தினம் புன்னகையுடன் சொன்னார் -

"நம்மை நம்பி அந்தப் பொண்ணு ஜமுனா எல்லா உண்மைகளையும் சொல்லிட்டிருக்கும்போது... திடீர்னு அவளோட அம்மா, அப்பா வந்ததும் என்ன சொல்றதுன்னே புரியலை..."

"நல்லவேளை... 'அந்தப் பகுதியில், இளம்பெண்களைக் கிண்டல் அடிப்பதாக நிறைய புகார் வருது... அந்தப் புகார்களில் உண்மை இருக்கான்னு விசாரணை பண்ணிட்டு இருக்கோம்'ன்னு சொல்லி ஒரு மாதிரி நான் அவங்களை சமாளிச்சேன்!"

"அந்தப் பொண்ணு ஜமுனா சொல்றதை நாம நம்பறதா... வேண்டாமா?"

"அவள் அநாவசியமா சுரேந்திரன் மேல ஏன் பழியைப் போடணும்? நெருப்பு இல்லாமல்

புகையாது சார்..."

"சுரேந்திரனைப் பார்த்தால் அப்படி மிரட்டுற ஆளாகத் தோணுதா?"

"அவரைப்பற்றி உடனடியா எந்த முடிவுக்கும் வரமுடியலை... ஜமுனாவோட பேச்சிலும் பொய் இருக்கிற மாதிரி தெரியலை..."

"இப்ப என்ன பண்ணலாம் பாலகுமார்?"

"டாக்டரோட வாயைக் கிளறிப் பார்க்கிறதைத் தவிர நமக்கு வேற வழியில்லை."

"ஆதாரம் எதுவும் வைச்சிக்காம பிளாக்மெயில் பண்ணியிருக்காருன்னு ஜமுனா சொல்றதில் இருந்து தெரியுது... அந்த தைரியத்தில் அவர் வாயைத் திறக்காம கமுக்கமா நடிச்சிட்டிருந்தா நாம என்ன செய்ய முடியும்?"

"நேரடியா கேட்டுட வேண்டியதுதான்."

"நான் திருடினேன்னு எந்தத் திருடன் ஒப்புக்கிட்டிருக்கான்? நிச்சயமா அவர் மறுப்பார்."

"வேணும்னே மறுக்கறவங்களுக்கும், உண்மையாவே மறுத்துச் சொல்றவங்களுக்கும் வித்தியாசம் தெரியும்."

பாலகுமார் சொல்லிக்கொண்டே மருத்துவமனை வளாகத்துக்குள் மோட்டார் சைக்கிளை திருப்பினார்.

மர நிழலில் நிறுத்திவிட்டு உள்ளே சென்றார்கள்.

டாக்டர் சுரேந்திரன் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து தனி அறைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

படுத்துக் கொண்டே ஒரு மருத்துவ மாத இதழைப் பார்வையால் மேய்ந்து கொண்டிருந்தார்.

நிழலாடவே - நிமிர்ந்தார்.

"வாங்க இன்ஸ்பெக்டர்."

உள்ளே பிரவேசித்து கட்டில் அருகே அமர்ந்தபின் சுரேந்திரன் மெல்ல கேட்டார்.

"அந்த மலர்க்கொத்தை வைச்சிட்டுப்



போனது யாருன்னு கண்டுபிடிக்க முடிஞ்சதா இன்ஸ்பெக்டர்?"

"கண்டுபிடிச்சிட்டோம்."

"யார் அது?"

"ஜமுனான்னு ஒரு பொண்ணு..."

"ஜமுனாவா?"

"உம்... அந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"உங்களை அந்தப் பொண்ணுக்கு நல்லாத் தெரிஞ்சிருக்கே..."

"நான் பொது சேவை பண்ணிட்டிருக்கேன்... என்னைப் பலபேருக்கு தெரிஞ்சிருக்கும்... எனக்கு அவங்க எல்லாரையும் தெரிஞ்சிக்க வாய்ப்பு இல்லையே..."

"உங்களை பர்சனலா தெரியும்ன்னு அந்தப் பொண்ணு சொல்லிச்சே டாக்டர்..."

சில விநாடி கண்ணை மூடி யோசித்துப் பார்த்தவர் - மறுத்துத் தலையசைத்தார்.

"இல்லை இன்ஸ்பெக்டர்... ஜமுனாங்கிற பேரில் எனக்கு எந்தப் பொண்ணையுமே ஞாபகம் இல்லை..."

"உங்ககிட்டே சமீபத்திலே சிகிச்சை எடுத்தவங்களைக் கூட நீங்க மறந்துடுவீங்களா?"

"அந்தப் பொண்ணு என்கிட்டே சிகிச்சை எடுத்தாளா?"

"ஆமா... ஆறு மாசத்துக்கு முன்னால..."

"ஒருவேளை நான் பேரை மறந்திருக்கலாம்... பொண்ணை நேரில் பார்த்தால் நினைவுக்கு வரலாம்... அந்தப் பொண்ணு ஏன் கோபமா எனக்கு லட்டர் எழுதணும்?"

"அதை நீங்கதான் சொல்லணும்."

"அவளைக் கைது செஞ்சீங்களா?"

"பெரிய இடத்துப் பொண்ணு... அவசரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்

போறதில்லை...''

''பெரிய இடத்துப் பொண்ணாயிருந்தாலும் குற்றம் பண்ணினா நடவடிக்கை எடுக்கத்தானே வேணும்?''

''யார்மேல தப்புன்னு இனிமேதான் கண்டுபிடிக்கணும்.''

''நீங்க சொல்றது புரியலை இன்ஸ்பெக்டர்...''

''அந்தப் பொண்ணு உங்ககிட்டே என்ன சிகிச்சை எடுத்துகிட்டாள்னு நீங்க கேக்கவேயில்லையே...''

முகத்தில் குழப்பம் காட்டியபடி சுரேந்திரன் விழித்தார்.

''நான்தான் ஞாபகமில்லைன்னு சொல்றேனே... அவள் என்கிட்டே எதுக்காக சிகிச்சை எடுத்துகிட்டாள்னு நீங்களே சொல்லுங்க இன்ஸ்பெக்டர்...''

''வீட்டுக்குத் தெரியாம அந்தப் பொண்ணு உங்ககிட்டே வந்து கருச்சிதைவு பண்ணிகிட்டாளாம்...''

''அப்படியா?''

''இப்போ ஞாபகம் வருதா டாக்டர்?''.

''தனியார் மருத்துவமனையில் இந்த மாதிரி நிறைய வரும்... எல்லாரையும் ஞாபகம் வச்சிக்க முடியுமா?''

எந்தவிதமான சலனமும் இல்லாமல் சுரேந்திரன் பதில் சொல்ல - ரத்தினமும், பாலகுமாரும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

தொடர்ந்து ரத்தினம் சொன்னார்.

''கருச்சிதைவுபண்ணின விசயத்தை வெளியே சொல்லிடுவேன்னு சொல்லி மிரட்டி நீங்க கிட்டத்தட்ட பதினைஞ்சாயிரம் வரைக்கும் பணம் பறிச்சிட்டிங்களாம்... வசதியான இளம்பெண்கள் இந்த மாதிரி விசயத்துக்காக உங்ககிட்டே வந்தா... மிரட்டி பணத்தைக் கறந்துடுவீங்களாம்... அவள் இப்படிச்



சொல்கிறாள்...''

முகப்பரப்பில் ஏராளமான அதிர்ச்சியைக் காட்டியபடி அவர்களைப் பார்த்தார் சுரேந்திரன்.

''சுத்த முட்டாள்தனம்! அபாண்டமான கற்பனையா இருக்கு... புத்திசுவாதீனத்தோடதான் அந்தப் பெண் பேசினாளா இன்ஸ்பெக்டர்?''

''கற்பனையா அந்தப் பொண்ணு ஒருத்தர்மேல ஏன் பழிபோடணும்? அதுவும் தன்மேல சேற்றை இறைச்சிகிட்டு யாராவது அடுத்தவங்களை அவமானப்படுத்த நினைப்பாங்களா?''

''அவள் சொன்னதை நம்பறீங்களா?''

''நம்பறதுக்கான முகாந்திரங்கள் இருக்கு!''

''உடம்பு பூராவும் கத்திக்குத்து வாங்கி படுத்துக் கிடக்கிறேன்... என்னைக் கொலை செய்ய முயற்சி பண்ணினவங்களைக் கண்டுபிடிக்கிறதை விட்டுட்டு பாதிக்கப்பட்ட என்மேலேயே சந்தேகப்படற முதல் இன்ஸ்பெக்டர் நீங்களாகத்தான் இருக்கணும்... நான் பணம் பறிச்சதா சொல்றாளே... அந்தப் பொண்ணு என்னை எங்கே, எப்போ சந்திச்சுப் பணத்தைக் கொடுத்தாள்னு கேட்டுப் பாருங்க...''

''அதெல்லாம் கேட்டாச்சு... சாமர்த்தியமா நீங்க மருந்துவமனைக்குப் பின்னால் விநாயகர் கோவில் உண்டியலில் பணத்தைப் போடச் சொல்லிட்டிங்களாம்... அந்த உண்டியலின் சாவி உங்ககிட்டேதானே இருக்கு?''

''ஆமா!''

''சாவியை ஏன் நீங்க வைச்சிருக்கீங்க?''

''அந்த உண்டியலில் மீறிப்போனா மாசத்துக்கு நூத்தம்பது. இருநூறு ரூபா தேறும்... அதை அப்படியே கோவில் பராமரிப்புக்கு பயன்படுத்தணும்கிறது என்னோட எண்ணம்... அதனால் சாவியை நான் வைச்சிட்டிருக்கேன்...''

''டாக்டர்! ஜமுனா தந்த வாக்குமூலம்

தெளிவா இருக்கு. டாக்டர்கிட்டேயும், வக்கீல்கிட்டேயும் பொய் சொல்லக்கூடாதுன்னு சொல்வாங்க... அதுல போலீசு கிட்டேயும்னு ஒரு வார்த்தை சேர்த்துக்கங்க...''

''நான் உங்ககிட்டே எதையும் மறைக்கலை இன்ஸ்பெக்டர்...''

''அப்படின்னா அந்தப் பொண்ணு ஜமுனா சொல்றது பொய்யா?''

''நான் எதுக்காக இப்படி மோசமான வழிகளில் பணம் சம்பாதிக்கணும்? சம்பாதிச்சு நான் யாருக்குத் தரப்போறேன்? உங்களுக்கே தெரியும் - நான் மனைவி, குழந்தை யாரும் இல்லாத ஒண்டிக்கட்டை...''

''யார் சொல்றது உண்மைன்னு போகப் போகத் தெரியும் டாக்டர்...'' சொல்லிவிட்டு அவரைப் புன்னகையோடு பார்த்தார் பாலகுமார்.

---

# 7

---

ஜீப் சீரான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

பாலகுமார் ஓட்டிக்கொண்டே சொன்னார்.

''டாக்டர் சுரேந்திரன் நல்லவரா, கெட்டவரான்னே தீர்மானிக்க முடியலை சார்...''

''அவர் நல்ல மாதிரின்னுதான் என் மனசுக்குப் படுது...''

''அப்புறம் ஏன் ஜமுனா அப்படிச் சொல்லணும்?''

''ஒருவேளை கொலை முயற்சியை அவளே செஞ்சிட்டு நாடகமாடலாம் இல்லையா?''

''அவ்வளவு தைரியம் அந்தப் பொண்ணுக்கு இருக்குமா சார்?''

''உள்ளே போலீஸ் விசாரணை நடக்கும்போதே வெளியே ஒரு மலர்க்கொத்தை வைச்சிட்டுப் போற தைரியசாலி எதையும் செய்வாள்...''



''தப்புப் பண்ணினது யாருன்னு நாம எப்படி ஒரு தீர்மானமான முடிவுக்கு வர்றது?''

''ஜமுனாகிட்டே தப்பு இருக்கான்னு தெரிஞ்சிக்க ஒரு வழி இருக்கு.''

''என்ன சார்?''

''ஜமுனாவோட போட்டோ கைவசம் இருக்கு... அந்த போட்டோவை - சம்பவம் நடந்த அன்னிக்கு டாக்டர்கிட்டே கடைசியா வந்த நோயாளி சாந்தாகிட்டே காட்டி விசாரிச்சிப் பார்க்கலாம். ஒருவேளை சாந்தா ஜமுனாவை அங்கே பார்த்திருந்தா அவளை விசாரிக்க வசதியா இருக்கும்... சாந்தாவோட வீடு ஜீவா நகர்லதான் இருக்கு. ஜீப்பை அங்கே விரட்டுங்க.''

ஜீவா நகரை நோக்கி ஜீப் திரும்பியது.

பதினைந்து நிமிட பயணம்.

ஜீவா நகர் வரவேற்பு வளைவு வரவேற்றது.

ஜீப் வளைவுக்குள் நுழைய - துடைத்து வைத்த சாலை அவர்களை பங்களாவுக்கு இடையே அழைத்துப் போனது.

''இதய சிகிச்சை நிபுணர் நாராயணன் வீடு எங்கிருக்குன்னு உங்களுக்குத் தெரியுமா பாலகுமார்?''

''மூன்றாவது குறுக்குத் தெருவில் இருக்குன்னு சொன்னாங்க... போய் பார்த்துடலாம் சார்...'' ஜீப்பை மெதுவான வேகத்தில் விரட்டி - இரண்டு குறுக்குத் தெருக்களைக் கடந்தார், பாலகுமார். மூன்றாவது தெருவுக்குள் நுழைந்து சில விநாடிகள் ஜீப்பைச் செலுத்தியதும் - பெரிய போர்டில் நீலநிற எழுத்துக்கள் இதய சிகிச்சை நிபுணர் நாராயணன் பெயரைத் தாங்கியிருந்தன.

''இந்த பங்களாவுக்குப் பக்கத்திலோ எதிரிலோதான் அந்தப் பொண்ணோட வீடு இருக்குன்னு டாக்டர் சுரேந்திரன் சொன்னார்.''

''எதிர் வீட்டில் கேட்டுப் பார்க்கலாம்.''

ஜீப்பைத் தெருவின் ஓரமாய் நிறுத்திவிட்டு - இதய சிகிச்சை நிபுணர் வீட்டுக்கு நேர் எதிர் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

அது ஒரு குட்டி பங்களா.

காம்பவுண்ட் கதவைத் திறக்கிற சத்தம் கேட்டு உள்ளே ஒரு பாமரேனியன் நாய் குரைத்தது.

ரோஜா செடிகளுக்கு நடுவே நடந்து சென்றார்கள்.

பாலகுமார் அழைப்புமணியை அழுத்தினார்.

உள்ளே அறைக்குள் இசை சிதறியது.

''யாரு?''

ஒரு நடுக்கமான குரல் சன்னல் வழியே வந்தது.

இருவரும் சன்னலுக்குத் திரும்பிப் பார்க்க - ஒரு பெரியவரின் முகம் தெரிந்தது. நெற்றிப்பரப்பு பூராவும் திருநீறு நிறைந்திருக்க - நரைத்த புருவங்களுக்கு மத்தியில் பளிச்சென்று குங்குமம். கனத்த சோடாபுட்டி கண்ணாடிகளுக்குப் பின்னே தெரிந்த விழிகளில் காக்கிச் சீருடைகளைப் பார்த்த திகைப்பு.

''எ... என்ன வேணும்?''

''ஒரு விசாரணைக்காக வந்திருக்கோம்.''

''விசாரணையா?''

''ஒரு வழக்கு விசயமாக சாந்தாங்கிற பொண்ணைத் தேடி வந்து இருக்கோம்.''

''சாந்தாவா?''

அவர் நெற்றியில் குழப்ப முடிச்சைப் போட்டுக் கொள்ள - பாலகுமார் தொடர்ந்தார்.

''இதய சிகிச்சை நிபுணர் நாராயணனின் வீட்டுக்கு எதிரிலோ, பக்கத்திலோதான் அந்தப் பொண்ணோட வீடு இருக்குன்னு சொன்னாங்க. அதான் விசாரிக்க வந்தோம்.''

''இங்கே அப்படி யாரும் இல்லையே...''

பேச்சுக் குரல் கேட்டு உள்ளே இருந்து ஒரு



இளைஞனும், பெண்ணும் எட்டிப் பார்த்தார்கள்.

''யாரு தாத்தா?''

கேட்டுக்கொண்டே அவன் சன்னல் அருகே வந்தான்.

பாலகுமார் அவனிடம் சாந்தாவைப் பற்றி விசாரித்தார்.

''நாராயணன் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்காளே அந்தப் பொண்ணைக் கேக்கிறாங்க தாத்தா...''

அவர்கள் இருவரும் வெகுளியாய்ச் சொல்ல - அந்தப் பெரியவர் இருவரையும் முறைத்துக்கொண்டே உள்ளே சென்றுவிட்டார். இளைஞனிடம் கேட்டார், ரத்தினம்.

''அந்தப் பொண்ணை உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும் இன்ஸ்பெக்டர்.''

''எந்த வீடுன்னு சொன்னீங்க?''

''அதோ... பச்சைப் பெயிண்ட் அடிச்சிருக்கே, அந்த வீடுதான்.''

ஆட்காட்டி விரலை நீட்டி அடையாளம் காட்டினான்.

''அதானே பார்த்தேன்! எதிரில் இருக்கிறீங்க. தெரியாமல் போயிடுமான்னு யோசிச்சேன்.''

''தாத்தா அந்தக் காலத்து ஆள். போலீசைப் பார்த்ததும் எதுக்கு வம்புன்னு நினைச்சிருப்பார்.''

''ரொம்ப நன்றி. நாங்க வர்றோம்.''

விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தார்கள்.

எதிர்ப்பக்கம் இருந்த பச்சைப் பெயிண்ட் வீட்டை நோக்கி நடந்தார்கள். காம்பவுண்ட் கேட் வெறுமனே சாத்திக் கிடந்தது.

சாதாரண ரக வீடு.

முகப்புக் கதவருகே சென்று அழைப்புமணியை அழுத்தினார்கள்.

''ப்ர்ர்ர்ர்...''

அழைப்புமணி உள்ளே கர்ணகடூரமாய் சத்தம் எழுப்பியது. காத்திருந்தார்கள். உள்ளே மவுனம்.

''என்ன பாலகுமார்... உள்ளே சத்தத்தையே காணோமே?''

''யாரும் இல்லையோ என்னவோ?''

''கதவில் பூட்டு இல்லையே?''

''உட்புறமாக பூட்டிக் கொள்ளும் கதவு சார்... பூட்டியிருக்கா இல்லையான்னு நம்மால் தெரிஞ்சிக்க முடியாது. அப்படியே உட்புறமாகப் பூட்டிட்டுப் போயிருந்தாலும் உள்ளே ஆள் இருக்கிற மாதிரிதான் தெரியும்...'' மேலும் ஒரு ஐந்து நிமிடங்களுக்கு அழைப்புமணியை அலற வைத்துப் பார்த்துவிட்டு ஏமாற்றமானார்கள்.

''பொண்ணு வெளியே போயிருக்கும்னு நினைக்கிறேன்... வந்தால் தகவல் தரச்சொல்லி எதிர் வீட்டில் சொல்லிட்டுப் போயிடலாம்.''

''சரி சார்.''

மீண்டும் எதிர் வீட்டுக்கு வந்தபோது - உள்ளே பெரியவர், அந்த இளைஞனிடம் ''உங்க இரண்டு பேருக்கும் எதுக்கு இந்த வம்பெல்லாம்? எனக்குத் தெரியாதுன்னு சொல்லிட்டுப் போகவேண்டியதுதானே?'' என்று திட்டிக்கொண்டு இருந்தார்.

பாலகுமாரும், ரத்தினமும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக்கொண்டார்கள்.

''போலீஸ் விவகாரம்னாலே எல்லாரும் ஒதுங்கத்தான் பார்க்கிறாங்க.''

''என்ன சார் பண்ணலாம்? அவர்களை கூப்பிட்டுச் சொல்லிட்டுப் போகலாமா?''

''பெரியவர் புலம்பினால் புலம்பிட்டுப் போறார்... அவங்க இரண்டு பேரும் உதவுவது போலத்தான் பேசினாங்க. அவங்ககிட்டே சொல்லிட்டுப் போகலாம். தப்பில்லை.''

அழைப்புமணிக்கு வேலை கொடுத்தார்கள்.

உட்புறம் ஒரு சில விநாடி அமைதி காத்து விட்டு காலடியோசை கேட்டது.



அந்த இளைஞன் கதவைத் திறந்தான்.

''என்ன சார்?''

''அழைப்மணி அடிச்சிப் பார்த்தோம். வீட்டில் யாரும் இல்லை போலிருக்கு...''

''அந்தப் பொண்ணு வெளியே போயிருக்கும்.''

''வீட்டில் வேற யாரும் இல்லையா?''

''அவள் தனியாத்தான் இருக்கா...''

''திருமணமானவளா?''

''திருமணமாகாதவள் சார்.''

''எங்கே வேலை பார்க்கிறாள்?''

''எனக்குத் தெரியலை சார்! என் மனைவியைக் கேட்டால் தெரியும்.''

''அவங்களைக் கொஞ்சம் கூப்பிடுங்க.''

இளைஞன் உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தான்.

''விமலா...''

அந்த விமலா வந்தாள்.

''இவங்க சாந்தாவைப் பற்றிக் கேக்கிறாங்க...''

அவள் மெல்லிய புருவங்களைச் சுருக்கி இருவரையும் பார்த்தாள்.

''என்ன சார்...?''

''அந்த சாந்தா கூட உங்களுக்குப் பழக்கம் இருக்கா...?''

''பழக்கம் எல்லாம் கிடையாது... எதிர்வீட்டில் இருக்கிறதுனால கோயில்ல பார்க்கிறபோது பேசிப்போம்... சிலசமயம் அவள் காப்பி பொடியோ, சர்க்கரையோ இரவல் கேட்டு இங்கே வருவா...!''

''சாந்தா வேலைக்குப் போகிறாளா...?''

''அவள் ஒரு டைப்பிஸ்ட் சார்...''

''எந்த கம்பெனியில் வேலை?''

''கம்பெனியெல்லாம் இல்லை... பகுதி நேர வேலைன்னு சொன்னா...''

''பகுதி நேர டைப்பிஸ்ட்டா...?''

''ஆமா சார்... காலையில் இருந்து சாயந்தரம்

வரைக்கும் நாலைஞ்சு இடங்களுக்குப் போய் டைப் பண்ணிக்கொடுத்துட்டு வருவா..."

"எங்கெல்லாம் போவாள்...?"

"அது எனக்குத் தெரியாது சார்... எதுக்காக அவளைத் தேடி வந்திருக்கீங்க...?"

தாத்தா சத்தம் போட்டார். "சாந்தா ஏதாவது தப்பு பண்ணிட்டாளா...?"

"இல்லை... இல்லை! பேப்பரில் படிச்சிருப்பீங்களே... டாக்டர் சுரேந்திரனைக் கொலை செய்ய யாரோ முயற்சி செஞ்சாங்கங்கற செய்தியை..."

"ஆமா! படிச்சோம்..."

"அந்தக் கொலை முயற்சி நடக்கறதுக்கு கொஞ்ச நேரத்துக்கு முன்பு சாந்தா அங்கிருந்திருக்கிறாள்..."

"அப்படியா...?"

"சாந்தா காய்ச்சலுக்காக அவர்கிட்டே போயிருக்கா... அன்னிக்கு டாக்டர் கடைசியாப் பார்த்த நோயாளி சாந்தா தான்... அவள் டாக்டரோட அறையை விட்டு வெளியே போனதும் கொலையாளி உள்ளே போய் தாக்குதல் நடத்தியிருக்கலாம்... அந்தக் கொலையாளியை சாந்தா பார்த்திருக்க வாய்ப்பிருக்கு... அதனால் நாங்க சந்தேகப்படற நபர்களின் போட்டோவைக் காட்டி அவளை அடையாளம் காட்டச் சொல்லணும்..."

விமலா மவுனமாய் இருக்க - ரத்தினம் தொடர்ந்தார்.

"சாந்தா வீட்டில் இல்லை...! அதனால் திரும்ப உங்ககிட்டே வந்தோம்... அவள் எங்கே போயிருப்பான்னு உங்களுக்குத் தெரியுமா...?"

"தெரியலையே...!"

"அவள் நடத்தை எப்படி...?"

"மன்னிச்சிடுங்க சார்... அவ்வளவு நெருக்கமாக அவளைப் பத்தி எனக்குத் தெரியாது... கோயில்ல பார்த்தா பேசறதோட சரி..."



"அவளைப் பார்த்தாலோ... அவளோட வீடு திறந்திருந்தாலோ எங்கள் தொலைபேசிக்கு தொடர்பு கொள்ளச் சொல்லிடறீங்களா...?"

விமலா அவள் கணவனைப் பார்த்தாள்.

அவன் தலை அசைத்தான்.

"நான் உங்களுக்கு போன் பண்ணி சொல்லிடறேன் சார்..."

"நன்றி..."

இருவரும் ஜீப்புக்கு வந்தார்கள்.

ரத்தினம் சொன்னார்.

"சாந்தாவைப் பார்த்துட்டா வழக்கு எளிதாகிவிடும்..."

பாலகுமார் ஜீப்பை உசுப்பிக்கொண்டே அவரை ஆமோதித்தார்.

"ஆமா... சார்..."

ஜீப் சாலையில் வழுக்கிச் செல்லத் தொடங்கியது.

உண்மையில் சாந்தாவைப் பார்த்த பிறகுதான் வழக்கு மேலும் சிக்கலாகப் போகிறது என்பதை அந்த நிமிடம் வரை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

## 8

அன்றைக்கு காலை பத்து மணி.

மரப்பாச்சி பொம்மை மாதிரி சோகையாய் இருந்த பெண்ணின் கையில் ஊசியை சொருகிக் கொண்டிருந்தாள் வசுமதி.

கம்பவுண்டர் தீனதயாளன் அருகில் வந்தார்.

"டாக்டர் வந்துட்டார் வசுமதி..."

"அதுக்குள்ளேயா...? நாமதான் மருத்துவமனையைப் பார்த்துக்கிறோமே... இன்னும் இரண்டு நாள் ஓய்வு எடுத்துட்டு

வந்திருக்கலாம்...''

''அவரால் ஒரு நிமிடம் கூட சும்மா இருக்க முடியாது... இது நமக்கெல்லாம் தெரிஞ்ச விசயம்தானே... நோயாளிகளைப் பார்க்க வரப்போறார்... உன்கிட்டே சொல்லச் சொன்னார்...''

அந்த நோயாளிப் பெண்ணை அனுப்பிவிட்டுத் திரும்பினாள் வசுமதி.

இன்ஸ்பெக்டர் ரத்தினமும், பாலகுமாரும் வந்து கொண்டிருந்தார்கள்.

''வணக்கம் சார்...''

''வணக்கம்...''

''டாக்டர் இருக்காரா...?''

''இருக்கார்...''

''வீட்டுக்கு போன் பண்ணினோம்... அவர் இங்கே வந்துட்டதா சொன்னாங்க... அவரைப் பார்க்கத்தான் வந்தோம்...''

''அதைப் பத்தித்தான் நானும், வசுமதியும் பேசிட்டிருந்தோம் சார்... மருத்துவமனையை நாங்க கவனிச்சிக்கறப்ப அவர் இன்னும் கொஞ்சம் ஓய்வு எடுத்திட்டு வந்திருக்கலாம்...''

''வெளி நோயாளிகள்... உள்ளே சேர்ந்திருக்கிற நோயாளிகள் எல்லாரையும் கவனிச்சிக்கறது நீங்கள் இரண்டு பேரும் தானே...?''

''ஆமா... சார்...''

''டாக்டரைக் குத்தின ஆசாமியைக் கண்டுபிடிக்கற வரைக்கும் நீங்கள் இருவரும் எச்சரிக்கையாக இருக்கணும்...''

''நாங்க இருவரும் எச்சரிக்கையா இருக்கணுமா?''

''ஆமாம்... கொலைகாரன் மறுபடி முயற்சி செய்ய வாய்ப்பிருக்கு... இங்கே ஏற்கனவே இருக்கிற நோயாளிகள்... புதுசா வந்திருக்கிறவங்க... வெளி நோயாளிகள்... நோயாளிகளைப் பார்க்க வருகிற பார்வையாளர்கள்... இவர்களில் யாராவது



சந்தேகத்துக்குரியவர்களாகத் தெரிந்தால் உடனே நீங்கள் போலீசுக்கு தகவல் கொடுக்கணும்...''

வசுமதியும், தீனதயாளனும் தலையசைத்தார்கள். சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்ட ரத்தினம் தணிந்த குரலில் -

''நான் இப்போது கேக்கப்போற கேள்விக்கு தயக்கமில்லாமல் உண்மையான பதிலைச் சொல்லணும்...'' என்றார்.

''உங்கள் டாக்டரோட நடத்தை பத்தி எங்களுக்குத் தெரிஞ்சாகணும்...''

''ஊருக்கே தெரிஞ்சதுதானே சார்... அவர் ரொம்பவும் நல்ல குணம்...''

''பல நேரங்களில் வெளி உலகத்துக்குத் தெரியறதெல்லாம் உண்மையா இருக்காது...''

''மற்ற பெரிய மனிதர்களைப் போல எங்க டாக்டர் வெளி வேடம் போடறவரில்லை...''

''அவரைப் பத்தி சில குறை வந்திருப்பதாலதான் கேக்கறோம்...''

''குறையா...? என்னன்னு...?''

''பணக்கார வீட்டைச் சேர்ந்த இளம் பெண்கள் இரகசியமாக இங்கே வந்து கருச்சிதைவு பண்ணிக்கிட்டா அந்த இரகசியத்தை வெளியிட்டுவிடப் போறதா சொல்லி மிரட்டி பணம் பறிப்பார்ன்னு பரவலா ஒரு பேச்சு...''

''யாரோ அவர் மேல அபாண்டமா பழி போட்டிருக்காங்க சார்... இவர்மேல் பொறாமைபிடிச்ச டாக்டர்கள் யாராவதுகூட இப்படி ஒரு வதந்தியைப் பரப்பி விட்டிருப்பாங்க...''

''வதந்தி இல்லை... ஓரளவுக்கு நம்பகமான இடத்திலிருந்துதான் எங்களுக்குத் தகவல் கிடைச்சது... ஒருவேளை டாக்டரின் அந்தரங்க நடவடிக்கைகள் உங்களுக்கே கூடத் தெரியாமல் இருக்கலாம்...''

அவர்கள் அதிர்ச்சி கலந்த மவுனத்துடன் நின்றிருக்க - ரத்தினம் தொடர்ந்தார்.

''ஒரு நாளைக்கு பெரும்பாலான நேரம் டாக்டர் கூடவே இருப்பது நீங்கள்தான்... அதனால் இனிமேல் அவரைக் கொஞ்சம் கண்காணிங்க... அவர் நடவடிக்கையில் சந்தேகம் தட்டினால் எங்களுக்கு உடனடியாகத் தகவல் கொடுங்க...''

''சரி சார்...''

''விசயம் தெரிஞ்சும் அவரைக் காப்பாத்தறதுக்காக உண்மையை மறைச்சிங்கன்னா அவருக்கு உடந்தையாக இருந்ததா உங்களையும் கூண்டில் ஏத்தவேண்டி வரும்...''

''அவர் அப்படிப்பட்டவராகத் தெரியலை சார்... இப்ப நீங்கள் இப்படி ஒரு அதிர்ச்சியான குற்றச்சாட்டை சொல்லியிருக்கீங்க... நாங்கள் அவரை இனி கண்காணிக்கிறோம்... அவரிடம் தப்பு இருந்தால் அடுத்த நிமிடமே உங்களுக்குத் தெரியப்படுத்தறோம்...'' தீனதயாளன் சொல்ல -

இருவரும் டாக்டரின் அறையை நோக்கிச் சென்றார்கள்.

''இது விநோதமான வழக்கு சார்... நமக்கு இரட்டைத் தலைவலி...'' சொன்ன பாலகுமார் தொடர்ந்தார்.

''டாக்டரைக் கொலை செய்ய முயற்சி பண்ணின ஆசாமியைக் கண்டுபிடிக்கற தலைவலி ஒருபக்கம்... டாக்டர் குற்றவாளியான்னு கண்டுபிடிக்க வேண்டிய தலைவலி இன்னொரு பக்கம்...''

கதவைத் தட்டிவிட்டு டாக்டரின் அறைக்குள் நுழைந்தார்கள்.

சுரேந்திரன் நிமிர்ந்தார். பாலியெஸ்டர் சட்டைக்குள்ளே பிளாஸ்திரிகள் தெரிந்தன.

''வணக்கம் டாக்டர்... எப்படி இருக்கிங்க...?''

''எதிர்பார்த்ததைவிட சீக்கிரமாகவே குணமாகிவிட்டேன்... எந்த பிரச்சினையும் இல்லை...''

''இனிமேல்தான் நீங்கள் எச்சரிக்கையாக



இருக்கணும்...''

''ஏன்...?''

''இத்தனை நாளா நீங்கள் படுக்கையில் இருந்ததால் மத்தவங்களோட தீவிர கண்காணிப்பில் இருந்திங்க... அதனால் உங்களைக் கொலை செய்ய முயற்சி பண்ணின ஆசாமி அமைதியாக இருந்திருப்பான்... இப்போது நீங்கள் வழக்கமான வேலையைத் தொடங்கின பிறகு... உங்களை அறியாமலே அவனுக்கு வாய்ப்புகள் தரநேரும்... ஆளைப் பிடிக்கற வரைக்கும் நீங்க எச்சரிக்கையாத்தான் இருக்கணும்...''

சுரேந்திரன் சிரித்துக் கொண்டார்.

''நோயாளிகளைப் பார்க்காமல் என்னால ஒரு நாள் கூட இருக்க முடியாது சார்... பலதரப்பட்ட நோயாளிகளையும் நான் பார்க்க வேண்டியிருக்கு... எந்தவிதத்தில் நான் எச்சரிக்கையா இருக்க முடியும்...? வேலையே செய்யாமல் முடங்கிக்கிடக்கச் சொல்றிங்களா...?''

''இல்லை... இல்லை... அப்படிச் சொல்லலை...! முன்னேமாதிரி நோயாளிகளுக்குத் தனியா சிகிச்சை அளிப்பதைத் தவிர்க்கலாம்... கூட நர்சோ, கம்பவுண்டரோ இருப்பது நல்லது... அவங்ககிட்டேயும் சொல்லியிருக்கோம்... இந்தச் சின்னச் சின்ன எச்சரிக்கைகளும்... நாங்க சம்பந்தப்பட்ட ஆளைப் பிடிக்கிற வரைக்கும்தான்...''

''சாந்தாங்கற பொண்ணைத் தேடிப் போனீங்களே... அந்தப் பொண்ணோட வீட்டைக் கண்டுபிடிக்க முடிஞ்சதா இன்ஸ்பெக்டர்...?''

''வீட்டைக் கண்டுபிடிச்சிட்டோம்...''

''அவள்கிட்டே விசாரிச்சிங்களா...?''

''அந்தப் பொண்ணு வீட்டில் இல்லை...

வந்தால் தகவல் சொல்லச் சொல்லி எதிர்வீட்டில் சொல்லிட்டு வந்திருக்கோம்... இருபத்திநாலு மணி நேரமாச்சு... இதுவரைக்கும் எந்தத் தகவலும் இல்லை..."

"அந்தப் பொண்ணோட வீட்டில் வேற யாரும் இல்லையா...?"

"அவள் தனியாத்தான் இருக்கா..."

"தனியா இருக்கற பொண்ணு... இராத்திரி கூட வீட்டுக்கு வரலைன்னா என்னவோ தப்பு இருக்குன்னுதானே அர்த்தம்...?"

"அந்தப் பொண்ணைப் பத்தி முழுமையான விவரங்கள் இன்னும் தெரியலை... காய்ச்சல்ன்னுதானே உங்களைப் பார்க்க வந்தா... உடம்பு சரியில்லாததால் சொந்த ஊருக்குப் போயிருக்கலாம்..."

"அவளைப் பத்திக் கொஞ்சம் துருவிப் பாருங்க இன்ஸ்பெக்டர்... அன்னிக்கு நீங்கள் அவள் மேல சந்தேகப்பட்டப்பகூட நான் ஏத்துக்கலை... அந்தப் பொண்ணைப் பார்த்தா அப்படித்தெரியலைன்னு சொன்னேன்... இப்போது அவள் மேல் சந்தேகம் வருது..."

"பார்க்கலாம் டாக்டர்... நாளை வரைக்கும் அவளைப் பத்தி எந்தத் தகவலும் கிடைக்கலைன்னா அவள் மேல் ஒரு சந்தேகப் புள்ளியை அழுத்தமா வைச்சிட வேண்டியதுதான்..."

சுரேந்திரனிடம் விடை பெற்று ஜீப்புக்கு வந்தார்கள்.

ஜீப்பில் வயர்லஸ் 'பீப்' ஓசையை இடைவிடாமல் துப்பிக் கொண்டிருந்தது.

வயர்லஸ் ரிசீவரை எடுத்து சுவிட்சை அழுத்தினார் பாலகுமார்.

மறுபக்கமிருந்து கரகரப்பான குரலில் தகவல் வந்தது.

பாலகுமாரின் முகம் கொஞ்சம் கொஞ்சமாய் மாறத் தொடங்கியது.

# 9

இதய சிகிச்சை நிபுணர் நாராயணனின் வீட்டுக்கு முன்னால் வேகமாய் வந்து நின்றது ஜீப்.

கான்ஸ்டபிள்கள் ஜீப்பைவிட்டுக் குதிக்க - ரத்தினமும், பாலகுமாரும் பரபரப்பான நடையில் நாராயணனின் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

முன்புறம் எதிர்ப்பட்ட வேலைக்காரனிடம், "வீட்டில் யார் இருக்காங்க? கூப்பிடு" என்று அதட்ட -

அவன் வேகமாய் உள்ளே சென்றான்.

சற்று நேரத்தில் நாராயணனும், அவர் மனைவியும் வெளிப்பட்டார்கள்.

நாராயணன் அசப்பில் டி.என். சேஷனை நினைவுபடுத்தினார்.

ரத்தினம் அவரிடம் கேட்டார்.

"போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு போன் பண்ணினது நீங்கதானா?"

"ஆமா இன்ஸ்பெக்டர்."

"எப்போது இருந்து நாற்றம் அடிக்குது?"

"காலையில் இருந்தே! தெற்குப் பக்கமிருந்து காற்று அடிக்கிறதைப் பார்த்துட்டு நாற்றம் பக்கத்து வீட்டில் இருந்துதான் வருதுன்னு பேசாமல் இருந்துட்டோம்."

ரத்தினமும், பாலகுமாரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள - நாராயணன் தொடர்ந்தார்.

"நேரம் ஆக ஆக வாடையின் வீரியம் அதிகமாயிட்டே போச்சு... நான் டாக்டர் என்பதால் இந்த வாடையில் ஒரு பிராணி செத்ததால வர்ற வாடை இல்லைன்னு உணர

முடிஞ்சது... அதனாலதான் போலீஸ் கட்டுப் பாட்டு அறைக்கு போன் பண்ணிட்டேன்...''

ரத்தினம் பாலகுமாரிடம் திரும்பினார்.

''சாந்தாவோட வீட்டை உடைத்து உள்ளே போய்ப் பார்த்துடலாம்.''

''சரி சார்.''

வெளியே சென்ற பாலகுமார் கான்ஸ்டபிள் களிடம் உத்தரவுகளைப் பிறப்பிக்க - அடுத்த காம்பவுண்டிலிருந்த சாந்தாவின் வீட்டை பூட்ஸ் கால்கள் மிதித்தன.

''கதவை உடைச்சிடலாமா சார்?''

மூக்கைப் பொத்திக் கொண்டு கேட்டார் ஒரு கான்ஸ்டபிள்.

''பின்னாடிக் கதவைப் பாருங்க... அதுவும் பூட்டி இருந்தால் அப்புறம் உடைக்கலாம்.''

சுற்றிவந்த கான்ஸ்டபிள், ''சார்... கதவை உடைக்க வேண்டிய அவசியமில்லை... பின்பக்கக் கதவு சும்மாதான் சாத்திக்கிடக்கு'' என்றார்.

எல்லாரும் பின்புறக் கதவு வழியே உள்ளே பிரவேசித்தார்கள்.

குறுகலான சமயலறையைக் கடந்து சென்றார்கள்.

உள்ளே செல்லச் செல்ல வாடை வயிற்றைப் புரட்டத் தொடங்கியது.

மத்தி அறையில் ஒரு மூலையில் மல்லாந்து கிடந்தாள் சாந்தா. நைட்டி கசங்கிக் கிடக்க - வாயிலிருந்து இரத்தக் கோடுகள் கழுத்து வழியே இறங்கியிருந்தன. உடம்பு நிறம் மாறி அழுக ஆரம்பித்திருந்தது. கண்கள் தோண்டப்பட்டு இரத்தக் குழிகளாய் தெரிந்தன.

ரத்தினம் பாலகுமாரை ஏறிட்டார்.

''கொலை நடந்து இரண்டு நாள் இருக்கும் போலிருக்கு...?''

''அப்படித்தான் சார் தெரியுது.''

''கைரேகை எடுக்கிறவர்களுக்குத் தகவல்



அனுப்பி டாக்டருக்கு சொல்லிடுங்க... அநேகமா இங்கேயே பிரேத பரிசோதனை பண்ண வேண்டியிருக்கும்...''

''சரி சார்.''

''நேத்திக்கு நாம வந்து பார்த்தப்பவே இவள் வீட்டுக்குள்ளே பிணமாத்தான் கிடந்திருக்கணும்...''

''ஆமா சார்... இவள் வெளியே போயிருக்க லாம்னு நாம் திரும்பிப் போயிட்டோம்.''

''எதிர் வீட்டில் விசாரிச்சிட்டு வரலாமா பாலகுமார்?''

தலையசைத்து ரத்தினத்தோடு நடந்தார் பாலகுமார்.

காம்பவுண்ட் கதவைத் திறக்கிறபோது விமலாவின் கணவன் அரி வெளியே வந்தான். அவனைத் தொடர்ந்து விமலா.

அரி சொன்னான்.

''சன்னல் வழியாப் பார்த்தேன் சார்... சாந்தா வீட்டில் போலீஸ் நடமாட்டம் தெரிஞ்சது. என்னோட மனைவி விமலாவைக் கூப்பிட்டுக் கேட்டேன். ஒண்ணும் தெரியலையேன்னு சொன்னாள். எதிர் வீட்டில் என்ன நடந்திருக்கு சார்?''

''சாந்தா வீட்டுக்குள்ளே கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறா.''

அரி, விமலா முகங்களில் அதிர்ச்சி.

''கொ... கொலையா...?''

''இதய சிகிச்சை நிபுணர் நாராயணன்தான் போன் பண்ணி எங்களுக்குத் தகவல் சொன்னார்.''

''அவருக்கு எப்படித் தெரியும்?''

''உள்ளே சாந்தா செத்துக் கிடக்கிறது அவருக்கும் தெரியாது. ஆனால் பக்கத்து வீட்டிலிருந்து வாடை வர்றதை கவனிச்சு தகவல் கொடுத்திருக்கார்.''

''எங்களுக்கு எந்த வாடையும் வீசலையே சார்?''

''காற்று கிழக்கு, மேற்கா வீசிட்டிருக்கு.

அதனால் வாடை இந்தப் பக்கம் வரலை.''

''கொலை எப்படி நடந்திருக்கு சார்?''

''யாரோ பின்கட்டு வழியா உள்ளே நுழைந்து அவளைக் கொலை பண்ணியிருக்கலாம்.''

''அடக்கடவுளே...''

''அவளோட சொந்த ஊர் எதுன்னு உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியலை சார்.''

''அடிக்கடி பார்க்க வர்றவங்க யாருன்னு தெரியுமா?''

''தெரியாது சார்... இந்த ஏரியாவில் எல்லாருமே தான் உண்டு தன் வேலை உண்டுன்னு இருக்கிறவங்க... நாங்களும் அதுக்கு விதிவிலக்கில்லை... அவள் வீட்டுக்கு யார் வர்றாங்க, போறாங்கன்னு கவனிக்க எங்களுக்கு நேரமும் இருக்காது.''

''டாக்டர் சுரேந்திரனை உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''அவரோட காரை நீங்கள் இங்கே எப்பவாவது பார்த்து இருக்கிறீங்களா?''

''இல்லை சார்... கவனிச்சதில்லை.''

அரை மணி நேர விசாரணைக்குப்பின் ஏமாற்றத்தோடு அங்கிருந்து நகர்ந்தார்கள்.

''சார்... இது ஓரளவு வசதியானவர்கள் இருக்கிற ஏரியா. இங்கே அக்கம் பக்கம் விசாரிக்கிறதால எந்த நன்மையும் இல்லை. அடுத்த வீட்டுக்காரரோட முகத்தைக் கூட பார்த்து வைச்சிருக்காதவர்கள்தான் இங்கே இருக்காங்க...''

''அப்படின்னா சாந்தாவோட வீட்டில் கிடைக்கிற தடயங்களை வைச்சித்தான் வழக்கை நகர்த்த முடியும்.''

''நிச்சயமா! அன்னிக்குக் கடைசியா டாக்டரைப் பார்த்த நோயாளி சாந்தாதான்... கொலை முயற்சி பண்ணினவன் இவளைப் பார்த்துட்டான்... இவளும் அவனைப் பார்த்திருக்கலாம்... நாம் விசாரிக்கிறதுக்கு முந்தி சாந்தாவைத் தீர்த்துக்கட்டிட்டா... அவனை நெருங்கறதுக்கான வழி ஒண்ணு அடைபட்டிடுமே...?''



''அப்படியும் இருக்கலாம்.''

பேசிக்கொண்டே சாந்தாவின் வீட்டைத் தொட்டார்கள்.

கைரேகை எடுக்கும் ஆட்களும், காமிராக்காரரும் தங்கள் வேலைகளை முடித்திருந்தார்கள்.

கான்ஸ்டபிள் ஒருவர் - வீட்டில் கிடைத்த டைரியை நீட்டினார். பாலகுமார் அதை வாங்கிக்கொண்டிருக்கும் போதே - பிரேத பரிசோதனையை முடித்திருந்த அந்த அரசாங்க டாக்டர் இருவரையும் எதிர்கொண்டார்.

''பிரேத பரிசோதனை முடிஞ்சதா டாக்டர்?''

ரத்தினம் கேட்டார்.

''முடிந்தது.''

''எப்படி கொலை நடந்திருக்கு?''

''கயிறால் கழுத்தை இறுக்கி கொலை பண்ணியிருக்காங்க... சுவாசக் குழாய் உடைஞ்சிருக்கு... அதான் வாயில் இரத்தம்...''

''குறிப்பிடும்படியா வேற தகவல் ஏதும் இருக்கா?''

டாக்டர் தலையசைத்தார்.

''அந்தப் பொண்ணு மூணுமாத கர்ப்பம்... அதோடு கண்கள் முழுமையா தோண்டி எடுக்கப்பட்டிருக்கு...''

---

## 10

---

ரெயின்போ கெமிக்கல்ஸ்.

பெயிண்ட் உதிர்ந்த போர்டுடன் ஒரு சின்ன அலுவலகம்.

முன்னால் அலுவலக கிளார்க்

உட்கார்ந்திருந்தார். அவருக்குப் பின்னே அலமாரியில் ஏராளமான இரசாயனப் புட்டிகள். சின்னச் சின்ன அட்டைப் பெட்டிகளில் இருந்த அவைகளை எடுத்து வைத்த இரண்டு இளம் பெண்கள் தெரிந்தார்கள்.

ஒரு காலி மேசையில் டைப்ரைட்டர் உறை போட்டுப் போர்த்தப்பட்டிருந்தது.

வாசலில் ஜீப் சத்தம் கேட்டு கிளார்க் நிமிர்ந்தார்.

ரத்தினமும், பாலகுமாரும் உள்ளே வந்துகொண்டிருந்தார்கள்.

நெற்றியில் விழுந்த கேள்விக்குறியோடு இருவரையும் பார்த்தார் அந்த கிளார்க். தயக்கமாய் எழுந்தார். போலீஸ் உடை அவரை மிரள வைத்தது.

''என்ன வேணும் சார்?''

''முதலாளி இருக்காரா?''

சன் பிலிம் ஒட்டப்பட்ட அறையைக் காட்டிச் சொன்னார்.

''வெளியே போயிருக்கார். என்னவாயிருந்தாலும் நீங்கள் என்னிடம் சொல்லுங்க சார்.''

''சாந்தாங்கிற பொண்ணைத் தெரியுமா?''

''தெரியுமே. இங்கே டைப் அடிக்க வர்ற பொண்ணுதானே? அவளுக்கு என்ன?''

''வந்திருக்காளா?''

வேண்டுமென்றே கேட்டார்.

''நாலைஞ்சு நாளா அவள் விடுமுறை சார்'' என்றார் சலனமில்லாமல்.

''விடுமுறைன்னா... கடிதம் கொடுத்திருக்காளா?''

''காய்ச்சலா இருக்குன்னு சொல்லி ஒருநாள் எழுதிக் கொடுத்தாள். அன்றைக்கு முதல் ஆளைக் காணோம்...''

''என்ன ஏதுன்னு நீங்க விசாரிக்கலையா?''

''காய்ச்சல் அதிகமாயிருக்கும்... வந்து



சொல்லிப்பாள்னு விட்டுட்டோம்.''

''இனி அவள் வரமாட்டாள்.''

''என்ன சார் சொல்றீங்க?''

''அவளை யாரோ கொலைபண்ணிட்டாங்க.''

''கடவுளே...'' அவர் வாய்யைப் பிளந்து லேசாய் அதிர்ந்தார்.

''நீங்க இங்கே என்னவா இருக்கீங்க?''

''புக்கிங் கிளார்க்.''

''உங்க பேரு?''

''சந்தோஷ்.''

''அவள் நடத்தை எப்படி?''

''அமைதியான பொண்ணு... அநாவசியமா யார்கிட்டேயும் வம்பளந்துகிட்டிருக்க மாட்டாள்.''

''சிலபேர் பார்க்க அமைதியா இருப்பாங்க... துருவிப் பார்த்தா மோசமான நடத்தைன்னு தெரியவரும்... தனிப்பட்ட வாழ்க்கையில் சாந்தா எப்படிப்பட்டவள்?''

''அவள் நாள்பூராவும் ஆறேழு கம்பெனிகள் ஏறி இறங்கறவள்... அவள் இங்கே இருப்பது இரண்டு மணி நேரம்தான்... இரண்டு மணி நேரத்தில் டைப் பண்ண வேண்டிய் குறிப்புகள், கடிதங்கள் எல்லாத்தையும் டைப் பண்ணி வாங்கவே சரியாயிருக்கும்... தனிப்பட்ட முறையில் அவளைப் பற்றித் தெரிஞ்சிக்க நேரம் ஏது சார்?''

''காதல் தோல்வி இருக்கிற மாதிரி தெரிஞ்சதா?''

''தெரியலை சார்... அவள்கிட்டே நான் பேச்சுக் கொடுக்கிறதே இல்லை.''

''பேச்சுக் கொடுக்கலைன்னாலும் அவளை இங்கே கொண்டுவந்து யாராவது விடுவதை நீங்க கவனிச்சிருக்கலாம். அல்லது அவளோட பெயருக்கு கடிதம் வர்றதை பார்த்திருக்கலாம்.''

''கடிதம் எதுவும் வர்றதில்லை சார். அதே மாதிரி அவள் எப்பவுமே பஸ்ஸைவிட்டு இறங்கி

நடந்துதான் வருவாள். சில சமயம் முதலாளி 'கார்ல வாயேன்'னு சொன்னாக்கூட, 'பரவாயில்லை சார்'ன்னு சொல்லிட்டு நடந்தே போவாள்.''

''இங்கே வேலை செய்யறவங்களை உங்க முதலாளி காரில் கொண்டுபோய் விடுவாரா?''

''இ... இல்ல சார். எப்பவாச்சும் வெளியே புறப்படறப்ப ஒரு மரியாதைக்காகக் கேட்பார்.''

''இங்கே வேலை பார்க்கிற மற்ற பொண்ணுங்களை நாங்க விசாரிக்கணுமே?''

''முதலாளி வரட்டும் சார்.''

''எங்கே போயிருக்கார்?''

''கம்பெனி விசயமா சென்னைக்குப் போயிருக்கார். நாளைக்கு வந்துடுவார்.''

''அதுவரைக்கும் எங்களால் காத்து இருக்க முடியாது... இங்கே வேலை பார்க்கிற பொண்ணுங்களைக் கூப்பிடுங்க.''

கண்டிப்பான குரலில் ரத்தினம் சொல்ல - அவர் லேசாகக் கலவரமானார்.

''தனித்தனியா விசாரிக்கணும். ஒவ்வெருத்தரையா வரச்சொல்லுங்க. அந்த அறையில் உட்கார்ந்து விசாரிக்கலாமா?''

கலவரம் முகத்தில் இன்னமும் நீங்காமல் இருக்க - தலையை பலமாக ஆட்டினான். ''உம்... விசாரிங்க சார்.''

அலுவலர் ஓய்வறை போல் இருந்த அந்த அறைக்குள் நுழைந்து ஓரமாயிருந்த நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தார்கள்.

பேக்கிங் செய்து கொண்டிருந்த பெண்களில் ஒருத்தி தயங்கித் தயங்கி அவர்களுக்கு எதிரே வந்து நின்றாள்.

''உன் பேர் என்னம்மா?''

''கனகம்.''

''சாந்தா செத்துப் போயிட்டா... தெரியுமா?''

''கிளார்க் சொன்னாருங்க.''



''சாந்தா கூட உனக்குப் பழக்கம் இருக்கா?''

''என்கூட நல்லாப் பேசுவாங்க.''

''இங்கே அவளோட நெருக்கமான தோழின்னு யாரைச் சொல்லலாம்?''

''எல்லார்கிட்டேயும் அவள் ஒரே மாதிரித்தாங்க பழகுவா.''

''அப்படி இல்லைம்மா... சில விசயங்களை நாம எல்லார்கிட்டேயும் சொல்லமாட்டோம்... பிரேத பரிசோதனை டாக்டர் - சாந்தா கர்ப்பமா இருக்காங்கிற தகவலைச் சொல்லியிருக்கார்... சமீபத்துல உன்கிட்டே அதைப்பற்றி எப்பவாச்சும் சொல்லியிருக்காளா?''

''இல்லை'' என்று தலையசைத்தாள். செய்தியைக் கிரகித்த அதிர்ச்சியை முகப்பரப்பு பூராவும் காண்பித்தாள்.

''நம்பவே முடியலைங்க... அவள் எதுவுமே சொல்லலை...''

''யார்கிட்டேயோ அவள் மோசம் போயிருக்காள்னு தெரியுது... அவள் கொலை செய்யப்பட்டதுக்கு அதுவே காரணமாயிருக்கலாம்... விசயம் வெளியே வரக்கூடாதுன்னு அவளோட 'கர்ப்பத்துக்கு காரணமானவனே' அவளைக் கொலை செய்திருக்கலாம்... அவன் யாருன்னு கண்டுபிடிக்கத்தான் இந்த விசாரணை. உங்க ஆபீஸ் கிளார்க் சந்தோஷ் எப்படி?''

''அய்யய்யோ... அவர் அப்படியெல்லாம் மோசமா நடந்துக்கிறவர் இல்லைங்க. ஆனால்...'' என்றவள் சட்டெனப் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

''ஆனா என்ன?''

''வந்து...''

''இங்கே பாரும்மா... போலீஸ் விசாரணை உண்மைகளைத் தெரிஞ்சிக்கத்தான். எந்தக் காரணத்துக்காகவும் எந்த விசயத்தையும் மறைக்கக்கூடாது.''

''இல்லைங்க... நான் மறைக்கலை... ஆனா நான் சொல்லப்போற விசயத்தை நீங்கள் உங்களுக்குள்ளேயே வைச்சிக்கணும்... வெளியே தெரிஞ்சா என் வேலைக்கே உலை வைச்ச மாதிரி ஆயிடும்...''

''தைரியமா சொல்லு... நீ சொல்ற விசயங்களை இரகசியமா வைச்சிப்போம்.''

''எங்க முதலாளி கொஞ்சம் சபலப் பேர் வழிங்க... சாந்தாவை அவர் அடிக்கடி சீண்டி கிட்டே இருப்பார்...''

ரத்தினமும், பாலகுமாரும் நிமிர்ந்தார்கள்.

''உனக்கு... அது... எப்படித் தெரியும்...?''

''சாந்தாவே என்கிட்டே பலதடவை சொல்லியிருக்காள்...''

''என்னன்னு...?''

''முதலாளியோட அறைக்குப் போயிட்டு வந்தா எப்பவுமே புலம்புவா... 'சே... இந்த ஆளோட தினமும் ரோதனையா இருக்கு... பேசாமல் இந்த இரண்டு மணி நேரத்துக்கு வேற ஏதாவது கம்பெனி பார்த்துக்கலாமான்னு யோசிக்கறேன்...' அப்படின்னு அடிக்கடி சொல்லுவா...''

''முதலாளி அவள்கிட்டே மட்டும்தான் அப்படி நடந்துப்பாரா...?''

''எல்லாப் பெண்கள்கிட்டேயும் ஒரு மாதிரித்தான் பேசுவார்... சாந்தாகிட்டே ரொம்பவும் வழிவார்...''

அரை மணி நேரத்தில் இன்னொரு பெண்ணையும் விசாரித்து முடித்தார்கள்.

''பாலகுமார்...''

''சொல்லுங்க சார்...''

''சொல்லி வைச்ச மாதிரி இரண்டு பொண்ணுங்களுமே முதலாளி சாந்தா மேல் சபலப்பட்டிருக்கார்ன்னு சொல்றாங்க...''

''அவர்மேல் சந்தேகப்பட நிறைய முகாந்திரங்கள் இருக்கு... அதே சமயம்



டாக்டரோட வழக்கில் சாந்தா சம்பந்தப்பட்டிருக்கா... அதை வைச்சிப் பார்க்கறப்போ இந்த கர்ப்பத்துக்கு டாக்டர் கூட காரணமா இருக்கலாம்ன்னு தோணுது சார்...''

''அப்படின்னா சந்தேகப் பட்டியலில் டாக்டர்... இந்த கம்பெனி முதலாளி... இரண்டு பேரையுமே சேர்க்கணும்...''

''சரி... அன்றைக்கு அவள் கருச்சிதைவு பண்ணிக்கக்கூடப் போயிருக்கலாம்... அதில் ஏதாவது வாக்குவாதம் ஏற்பட்டு டாக்டரை இவள் தாக்கியிருக்கலாம்...''

''அவள் காய்ச்சலுக்காக வந்ததாத்தானே எல்லாரும் சொன்னாங்க...?''

''நர்சுகிட்டே காய்ச்சல்ன்னு சொல்லியிருப்பா... தப்பு டாக்டர் மேல் இருக்கற பட்சத்தில் அவர் உள்ளே நடந்த விசயங்களை மறைச்சிருக்கலாம்...''

''யூகம் நல்லா இருக்கு சார்... ஆனால், சாந்தாவோட கண்கள் தோண்டப்பட்டிருப்பதுதான் உதைக்குது...''

''அது ஒருபக்கம் இருக்கட்டும்... உண்மையிலேயே முதலாளி இப்போது கம்பெனி விசயமா வெளியூர் போயிருக்காரா... இல்லை தலைமறைவா இருக்காரான்னு தெரியணும்...''

''அவர் தொழில் ரீதியாக வெளியூர் போயிருந்தால் தொடர்பு கொள்ள முகவரி நிச்சயமா இருக்கணும்... போன் பண்ணி விசாரிச்சிட்டாத் தெரிஞ்சுபோகுது...''

மீண்டும் சந்தோஷிடம் வந்தார்கள்.

''உங்க முதலாளி ஆபீஸ் விசயமாத்தானே சென்னை போயிருக்கார்...?''

''ஆமா சார்...''

''சென்னையில் அவர் எங்கே தங்கியிருப்பார்? போன் நம்பர் இருக்கா...?''

''நாளைக்கு வந்துடுவார் சார்...''

''அவசரம்ன்னா அவருடன் தொடர்பு கொள்ள போன் நம்பர் இருக்கா இல்லையா...?''

''இ... இ... இருக்கு சார்...''

''போன் நம்பர் என்ன... சொல்லுங்க...''

சின்ன டைரியைப் பிரித்து அவர் முன்னே நீட்டினான் சந்தோஷ்.

அந்த தொலைபேசி எண்ணைக் குறித்துக் கொண்டார் பாலகுமார்.

''இங்கிருந்தே அவருக்கு போன் பண்ணிக்கலாமா...?'' என்று அவனிடம் ஒப்புக்கு அனுமதி கேட்டபடி போனை அருகில் இழுத்தார்.

பொத்தான்களை அழுத்தினார்.

மறுமுனையில் ரிங் போய்க்கொண்டே இருந்தது.

யாரும் எடுக்கவில்லை.

## 11

டாக்டர் சுரேந்திரன் அந்தக் காலை நேரத்தில் மருத்துவமனை போர்டிகோவில் காரைச் சொருகினார்.

வராந்தாவில் வேகமாய் நடந்தவர் நர்சுவின் அறையைக் கடக்கும்போது நின்றார். பூசைப் பொருட்களோடு நின்றிருந்த தீனதயாளனைக் கூப்பிட்டார்.

அவன் பவ்யமாய் வந்து நின்றான். நெற்றியில் விபூதி சந்தனம் பிரகாசித்தது.

''வணக்கம் டாக்டர்...''

''பூசைக்காக கிளம்பிட்டியா...?''

''ஆமாம் டாக்டர்...''

''வசுமதியை அறைக்கு வரச்சொல்லிட்டுப் போயிடு...''

''அவள் இன்னும் வரலை டாக்டர்...''

''இன்னிக்கு வசுமதியோட வேலைதானே...''



''ஆமா டாக்டர்.... அவள் வராததால் சித்ராவுக்கு போன் பண்ணி வேலையை பார்த்துக்க சொல்லிட்டேன்...''

''வசுமதி முன்கூட்டி தகவல் தந்திருக்காளா....?''

''இல்லை டாக்டர்...''

''அப்போ பூசையை முடிச்சிட்டு பொதுநோயாளிகளோட பட்டியலை எடுத்துட்டு வா...''

சுரேந்திரன் அவர் அறையை நோக்கிச் செல்ல - தீனதயாளன் மருத்துவமனையின் பின்புறம் இருந்த பிள்ளையார் கோயிலை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அதிகம் ஆள் புழக்கம் இல்லாத அந்தப் பகுதியில் முழங்கால் உயரத்திற்கு கோரைப் புற்கள் முளைத்திருந்தன. புற்களுக்கு நடுவே நடந்து -

கோயிலை நெருங்கியபோது -

காலில் ஏதோ இடறவே சட்டெனக் குனிந்தான் தீனதயாளன்.

காலில் இடறியது வசுமதியின் உடல்.

கோரைப் புற்களுக்கு நடுவே விழுந்து இறந்து கிடந்தாள். இரத்தம் உறைந்துபோன உடல்... இறுகிப்போன முகத்தில் கண்கள் இருந்த இடத்தில் இரண்டு குழிகள் மட்டும் தெரிந்தன.

## 12

தகவல் கிடைத்து பாலகுமாரும், ரத்தினமும் கவலை ரேகை ஓடும் முகங்களோடு அங்கே வந்து சேர்ந்தார்கள்.

டாக்டர் சுரேந்திரனையும், கம்பவுண்டர் தீனதயாளனையும் விசாரித்துவிட்டு ஓரமாய் போய் நின்று கொண்டார்கள். தாழ்ந்த குரலில் பேசினார்கள்.

''சார்... வசுமதியோட கண்களும் தோண்டப்பட்டிருக்கு...''

''ஒண்ணுமே புரியலையே... சம்பந்தா சம்பந்தமில்லாமல் கொலை விழுகுது...''

''டாக்டர் சுரேந்திரனில் ஆரம்பிச்சது... அவர் எப்படியோ அதிருஷ்டவசமாகத் தப்பிச்சிட்டார்... அடுத்தது சாந்தா... இப்போ வசுமதி...''

''டாக்டர் மட்டும் தப்பிச்சது உறுத்தலா இல்லே...?''

''உறுத்தலாத்தான் இருக்கு... ஆனால் அவரை நெருங்குற மாதிரி பிடி கிடைக்கலையே...? அவரும் நம்மகிட்டே எதையுமே காட்டிக்காமல் பதட்டம் இல்லாமத்தான் பேசறார் சார்...''

''இன்னொரு விசயமும் யோசிக்க வேண்டியிருக்கு...''

''என்ன விசயம் சார்...?''

''மூணு சம்பவங்களுக்கும் தொடர்பு இருக்கா இல்லையாங்கறது இன்னும் தெளிவாகலை...''

''எதை வைச்சு சார் அப்படிச் சொல்றீங்க...?''

''டாக்டரைக் கொலை செய்ய முயன்றது கத்தியால குத்தி... சாந்தா இறந்தது கயிறால் கழுத்து நெரிக்கப்பட்டு...! இப்போ இந்த வசுமதி தலையில அடிபட்டு செத்திருக்கா... கன்னமெல்லாம் பாருங்க சார்... நிறைய நகக்கீறல்கள்... ஏதோ போராட்டம் நடந்திருக்கு... அதில் கீழே தள்ளிவிடப் பட்டிருக்கா... பெரிய கல்லில் அடிபட்டு மரணம்...''

''சாந்தாவோட கொலைக்கும், வசுமதி கொலைக்கும் ஒரு ஒற்றுமை இருக்குசார்...''

''இரண்டு பேரோட கண்களும் தோண்டப்பட்டிருப்பதைச் சொல்றீங்க...?''

''ஆமாம் சார்...''

''டாக்டரைக் கொலை செய்ய முயன்றவன்... தீவிரமா நாம் விசாரணையில் இறங்கினதைப் பார்த்ததும் நம்மைத் திசை திருப்பறதுக்காக



இப்படிக் கண்களைத் தோண்டி எடுக்கிறானோ என்னவோ...?''

''நல்ல கோணம்...''

''இன்னொரு முக்கியமான சந்தேகம்...''

''என்ன சார்...?''

''நேற்றைக்கு வசுமதிக்கு பகல் வேலை... இல்லையா...?''

''ஆமாம்...''

''இந்தக் கொலை இராத்திரிதானே நடந்திருக்கணும்...?''

''ஆமா சார்...''

''பகல் வேலை பார்க்கிற வசுமதி இராத்திரி எதுக்காக மருத்துவமனைக்கு வந்தாள்...?''

''வேறு எங்காவது கொலை பண்ணிட்டு நம்மைத் திசை திருப்பறதுக்காகப் பிணத்தை இங்கே கொண்டு வந்து போட்டிருக்கலாம்...''

''நிச்சயமா அப்படி இருக்காது பாலகுமார்...''

''எப்படி இவ்வளவு உறுதியா சொல்றிங்க சார்...?''

''பின்னந்தலையில் கல் மோதி இறந்திருக்கா... இரத்தக்கறை தோய்ஞ்ச அந்தக் கல் மண்ணோடு மண்ணா பதிஞ்சு இங்கேதான் இருக்கு பாருங்க... தவிர இவளுக்கும், கொலைக்கும் இடையே நடந்த மரணப் போராட்டத்தில் கோரைப் புற்களெல்லாம் மிதிபட்ட தடயங்கள் நல்லாவே தெரியுது... வேறு எங்காவது கொலை பண்ணி ஒதுக்குப்புறமான இந்த இடத்தில் போட்டிருந்தால் கொலைகாரனோட காலடித்தடம் மட்டும் இங்கிருக்கும்...''

''ஆமா சார்... இப்போ நமக்குத் தெரியவேண்டியது... என்ன காரணத்துக்காக வசுமதி இராத்திரி நேரத்தில இங்கே வந்திருக்காள்... என்பது. அவள் இங்கே வந்ததுக்கான காரணம் தெரிந்தால் மத்த புதிர்களுக்கு விடை கிடைக்கலாம்...''

''அப்படி சொல்ல முடியாது பாலகுமார்... வசுமதி இங்கே வந்ததுக்கான காரணம் ரொம்ப சாதாரணமாகக்கூட இருக்கலாம்... சம்பந்தப்பட்ட ஆசாமி தனியாப் பேசணும்ன்னு சொல்லி அவளை இங்கே வரவழைத்து கூடத் தீர்த்துக்கட்டியிருக்கலாம்...''

''ஆமா சார்...''

''வசுமதிக்கு இன்னும் திருமணமாகலை... இல்லையா...?''

''ஆமா சார்...''

''அப்படின்னா இவளோட பிரேத பரிசோதனை அறிக்கையை நாம் ஆவலோட எதிர்பார்க்க வேண்டியதா இருக்கு...''

''எதுக்கு சார்...?''

''இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பெண்கள் எல்லாருமே யார்கிட்டேயாவது சோரம் போய் வயத்தை நிரப்பிகிட்ட இளம் பெண்கள் ஆக இருக்காங்க... உதாரணத்துக்கு சாந்தா... ஜமுனா...''

''எப்படியும் இன்னிக்கு சாயந்தரம் பிரேத பரிசோதனை அறிக்கை நம்ம கைக்கு வந்துடும். அப்ப உண்மை தெரிந்துவிடும் சார்...''

---

## 13

---

**சா**யந்தர நேர ஆறு மணிக்கு அந்த இளைஞன் ஏ-2 போலீசு நிலையத்துக்குள் நுழைந்தான்.

வாயிலிலிருந்த கான்ஸ்டபிள் மறித்து, ''என்ன வேணும்...?'' என்று கேட்க-

குளிர் கண்ணாடியைக் கழற்றி காட்டன் சட்டையில் துடைத்தபடியே, ''இன்ஸ்பெக்டர் இருக்காரா...?'' என்றான்.

''உள்ளே இருக்கார்... என்ன விசயம்...?''



''அவரையே பார்த்துப் பேசிக்கிறேன்...'' சொல்லிவிட்டு ஸ்டேசனுக்குள் பிரவேசித்தான்.

எதிர் எதிர் இருக்கையில் அமர்ந்து சில போட்டோக்களை உற்றுப் பார்த்து விவாதித்துக் கொண்டிருந்த பாலகுமாரும், ரத்தினமும் நிமிர்ந்தார்கள்.

அந்த இளைஞன் சல்யூட் அடித்தான்.

''என் பெயர் தீபக்குமார்... ரெயின்போ கெமிக்கல் கம்பெனியின் முதலாளி...''

''ஓ...! உக்காருங்க...''

அவர் காட்டின இருக்கையில் உட்கார்ந்து கொண்டே கேட்டான்.

''நீங்கள் என்னைத் தேடி சென்னைக்கு போனில் பிடிக்க முயன்றீர்களாம்... நான் அலுவலக விசயமாக சென்னை போயிட்டு இன்னிக்குத்தான் வந்தேன் இன்ஸ்பெக்டர்...''

''சரி... உங்க ஆபீசுல டைபிஸ்டா வேலை பார்க்கிற சாந்தா இறந்து போனது தொடர்பா உங்களைத் விசாரிக்கத்தான் தேடிட்டிருந்தோம்...''

''நான் சென்னையில்தான் இருந்தேன் சார்...''

''பலதடவை போன் பண்ணினோம்... ரிங் போனதே தவிர யாரும் எடுக்கலை...''

''அந்த போன் நாலு நாளா... வேலை செய்யலை சார்... இங்கே ஆபீசுக்கு வந்ததும் தகவல் சொன்னாங்க... உடனே கிளம்பி வந்துட்டேன்...''

''உங்ககிட்டே சாந்தாவைப் பத்தி நிறையக் கேக்க வேண்டியிருக்கு...''

''கேளுங்க...''

''நேரடியாவே விசயத்துக்கு வர்றேன்... கம்பெனியின் முதலாளியா இருப்பதை சாதகமா எடுத்துக்கிட்டு உங்ககிட்டே வேலை பார்க்கற சாந்தாகிட்டே நீங்க அதிகப்படியா உரிமை எடுக்க முயற்சி செஞ்சதா எங்களுக்குத் தகவல்கள் வந்திருக்கு...''

அவன் புன்னகைத்தான்.

''ஆமாம்... நான் அதை மறுக்கலை... சாந்தாவை எனக்குப் பிடிச்சிருந்தது... அவள் நினைச்சிருந்தா என்னைக் கல்யாணம் பண்ணிட்டு கம்பெனிக்கு இன்னொரு முதலாளியாகி இருக்கலாம்... முட்டாள் பொண்ணு... இப்போ இப்படி செத்துப் போயிருக்க வேண்டியதில்லை...''

''என்ன சொல்றீங்க...?''

''என்னோட விருப்பத்தை அவள்கிட்டே நான் பலதடவை சொல்லியிருக்கேன் சார்... ஆனால் எவனோ ஒரு பஞ்சப் பரதேசியைக் காதலிக் கறதா சொல்லி என்னை உதாசீனப்படுத்திட்டா... அதன் பலன்... இப்போ தற்கொலையில் வந்து முடிஞ்சிருக்கு...''

''தற்கொலையா...? என்ன சொல்றீங்க மிஸ்டர் தீபக்குமார்...? அவளை யாரோ கயிறால் கழுத்தை நெரிச்சிக் கொலை செஞ்சிருக்காங்க...''

இப்போது - தீபக்குமார் திடுக்கிட்டான்.

''விசம் குடிச்சு தற்கொலை செஞ்சிக்கப் போறதாத்தானே சாந்தா எனக்குக் கடிதம் எழுதியிருந்தா...?''

''என்னது... உங்களுக்கு சாந்தா கடிதம் எழுதினாளா...?''

''ஆமா சார்...'' சொல்லிக்கொண்டே அந்த அஞ்சல் உறையை நீட்டினான் தீபக்குமார்.

ரத்தினம் உள்ளே இருந்த கடிதத்தைப் பிரிக்க சாய்ந்த கையெழுத்து நீலகிற மையில் ஓடியிருந்தது.

**''சார்...!**

**வணக்கத்துடன் சாந்தா...**

**இதுவே என் கடைசி வணக்கமாக இருக்கும். நீங்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னீர்கள். நான் உங்களை ஒரு வில்லனைப் போலப் பார்த்தேன். அதன் பலன் கற்பைப் பறிகொடுத்துவிட்டு ஏமாந்து**



**நிற்கிறேன். நம்பினவன் கைகொடுக்க மறுக்கிறான். எனக்கு வேறு வழியில்லை. தற்கொலை செய்து கொள்வதென்று தீர்மானமாய் முடிவு எடுத்துவிட்டேன். உங்களை நிறைய அவமானப்படுத்தி இருக் கிறேன். மன்னிக்க வேண்டுகிறேன். அடுத்த பிறவி என்று ஒன்றிருந்தால் உங்களைப் போன்ற நல்லவருக்கு வாழ்க்கைப்பட ஆசைப்படுகிறேன்.**

**இன்னும் சில மணி நேரங்களில் உங்களை மட்டுமல்ல; இந்த உலகத்தையே மறக்கப் போகும்**

**சாந்தா.''**

படித்து முடித்து நிமிர்ந்தார் ரத்தினம்.

''அப்படியானால்... சாந்தா தற்கொலை செஞ்சிக்கிற முடிவோட இருந்திருக்கா...?''

''ஆமா இன்ஸ்பெக்டர்...''

''அவள் தற்கொலை செஞ்சிக்கறதுக்கு முன்னால் கொலைகாரன் அவளைக் கொலை செஞ்சிருக்கான்... அப்படித்தானே இருக்கணும் பாலகுமார்...?''

''தீபக்குமார் சொல்றதைப் பார்த்தால் அப்படித்தான் இருக்கணும் சார்...''

ரத்தினம் மீண்டும் தீபக்குமாரிடம் திரும்பிக் கேட்டார்.

''அவளைக் காதலிச்சவன் யார்...?''

''அவன் ஒரு வீட்டு புரோக்கர்... அவனைப் பத்தி நான் விசாரிச்சிப் பார்த்திருக்கேன்... நல்லவன் மாதிரி நடிச்சி பொண்ணுங்களை ஏமாத்தறது அவனுக்குக் கைவந்த கலை... நான் எல்லாப் பொண்ணுங்ககிட்டேயும் கலகலப்பா பேசுவேன்... அது சில பேருக்குப் பிடிக்கறதில்லை... அப்படித்தான் சாந்தாவும் என்னை நம்பாம அந்த ஏமாத்துப் பேர் வழியை நம்பிட்டா...''

பாலகுமார் ரத்தினத்தைப் பார்த்தார்.

''அப்படின்னா சாந்தா கர்ப்பத்தைக் கலைக்க முயற்சி செஞ்சிருக்கமாட்டான்னுதான் தோணுது சார்...''

''கண்கள் ஏன் தோண்டப்பட்டிருக்கு...? அந்த விசயம்தான் உறுத்திகிட்டு இருக்கு...''

அவர் சொன்ன அதே விநாடி -

தொலைபேசி வீறிடத் தொடங்கியது.

ரத்தினம் ரிசீவரை எடுத்தார்.

''அலோ...''

''நான் அரசாங்கப் பொது மருத்துவ மனையிலிருந்து டாக்டர் பேசறேன்...''

''சொல்லுங்க டாக்டர்...''

''அந்தப் பொண்ணு வசுமதியோட பிணத்தைப் பிரேதபரிசோதனை பண்ணியாச்சு...''

''ஏதாவது முக்கியமான செய்தி...?''

''இருக்கு சார்...''

''இவளும் கர்ப்பமா...?''

''இல்லை... இல்லை...''

''வேற முக்கியமான தகவல் கிடைச்சிருக்கா...?''

''ஒண்ணல்ல... இரண்டு...''

''இரண்டு தகவலா...?''

''ஆமாம்...''

''சொல்லுங்க டாக்டர்...''

''நீங்க நேரில் வந்துடுங்களேன்...'' என்றார் டாக்டர்

---

## 14

---

இருபதாவது நிமிடம் அரசாங்க மருத்துவமனை டாக்டரின் எதிரில் இருந்தார்கள் ரத்தினமும், பாலகுமாரும்.

பாலகுமார் கேட்டார்.

''வசுமதியோட பிரேதபரிசோதனை அறிக்கை



என்ன சொல்லுது டாக்டர்...?''

இருக்கையில் அமர்ந்த டாக்டர் மேசை டிராயரைத் திறந்து அந்தப் பாதுகாக்கப்பட்ட சின்னப் பொருளை அவரிடம் நீட்டினார்.

''இது வசுமதியோட வாய்க்குள் இருந்தது.''

அந்தப் பொருளின் மேல் பார்வையைப் போட்டவர்கள் திகைத்தார்கள்.

''சாவி போலிருக்கு...?''

''ஆமா... அநேகமா இந்த சின்னச் சாவிக்காகத்தான் கொலைகாரனுக்கும் வசுமதிக்கும் போராட்டம் நடந்திருக்கணும்... இவள் அவனுக்குத் தெரியாமல் சாவியை வாயில் போட்டு மறைச்சிருக்கா...''

பாலகுமார் டாக்டரைப் பார்த்து தொடர்ந்து கேட்டார்.

''இன்னொரு தகவல் இருக்குன்னு சொன்னீங்களே டாக்டர்... அது என்ன...?''

டாக்டர் சொன்னார் - அவர் சொல்லச் சொல்ல -

சட்டென்று பிரகாசமானார் பாலகுமார்.

ரத்தினத்தை ஏறிட்டார்.

''சார்... வசுமதியைக் கொன்னவன் யாருன்னு என்னால ஓரளவு அனுமானிக்க முடியுது...''

''யாரு...?''

''வாங்க சார்... போகப் போகச் சொல்றேன்...''

அடுத்த நிமிடம் - இருவரும் -

பிரேதபரிசோதனை அறிக்கையோடு ஜீப்பில் இருந்தார்கள்.

---

## 15

---

டாக்டர் சுரேந்திரன், பாலகுமார் காட்டிய அந்த சாவியை நுணுக்குற்ற கண்களால் பார்த்தார்.

''இது என்ன சாவி?''

''வசுமதியோட வாய்க்குள் இருந்தது... பிரேத பரிசோதனை பண்ணின டாக்டர் எடுத்துத் தந்தார்.''

''இதை எதுக்காக வசுமதி வாயில் மறைச்சி வைச்சிருந்தா?''

''இது என்ன சாவின்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணுமே டாக்டர்...!''

சில விநாடி நெற்றியைச் சுருக்கி வைத்திருந்த சுரேந்திரன் மெல்லத் தலையசைத்தார்.

''இது... என்கிட்டே இருக்கிற பிள்ளையார் கோவில் உண்டியலின் சாவி மாதிரியே இருக்கு!''

''அந்த உண்டியலின் இன்னொரு சாவிதான் இது.''

''இது எதுக்காக வசுமதிகிட்டே இருக்கு?''

''ஜமுனா சொன்னது நினைவு இருக்கா டாக்டர்? கருக்கலைப்பு செய்ததுக்கப்புறம் மிரட்டல்,..! இரகசியமா கருவைக் கலைச்ச பாவத்தைப் போக்கிக்க யாருக்கும் தெரியாமல் உண்டியலுக்குள் நுபாபத்தாயிரம் போடணும்னு நீங்கள் மிரட்டினதா சொன்னாளே?''

''ஆமா.''

''நர்சு வசுமதி தனக்கு ஒரு துணையை சேர்த்துக்கிட்டு உங்க பேரைச் சொல்லி, இங்கே கருக்கலைப்பு பண்ணிக்கிற இளம் பெண்களை மிரட்டி பணம் பண்ணியிருக்கா...''

''யார் அந்தத் துணை?''

''தீனதயாளன்.''

''கம்பவுண்டர் தீனதயாளனா?'' சுரேந்திரன் அதிர்ச்சியோடு கேட்டார்.

''ஆமாம் டாக்டர்! பிரேத பரிசோதனையில் கிடைச்ச இன்னொரு தகவல் அவனைக் காட்டித் தந்துடுச்சு...''

''என்ன தகவல்?''

''வசுமதியின் உடல் மேல காய்ந்துபோன



சந்தனம், விபூதி, குங்குமத் துணுக்குகள்... அங்கங்கே ஒட்டிக்கிடந்திருக்கு... இந்த மருத்துவமனையில் விநாயகர் கோயிலுக்கு பயபக்தியா பூசையெல்லாம் பண்ணிட்டு எப்பவுமே விபூதிப்பட்டை, சந்தன குங்குமத்தோட சிவப்பழமா நிப்பானே தீனதயாளன்... அவன்தான் பெண்களை மிரட்டுகிற நாடகத்தில் உங்கள் குரலுக்கு டப்பிங் தர்றவன்! அந்த நாடகத்தின் இறுதிக் காட்சியாக வசுமதியையே தீர்த்துக்கட்டிட்டான்.''

''எ... எதுக்காக?''

''நேத்து இராத்திரி வசுமதி ஏதோ பணத் தேவைக்காக தீனதயாளனுக்குத் தெரியாமல் உண்டியலில் இருந்து பணத்தை திருட்டுத்தனமா எடுக்க வந்திருக்காள். தீனதயாளனுக்கு விசயம் தெரிஞ்சிருக்கு. அவன் கண்டிச்சிருக்கான். இரண்டு பேருக்கும் போராட்டம். சாவியை அவனுக்குத் தெரியாமே வாயில் மறைச்சு வைச்சிருக்கா. நடந்த போராட்டத்தில் வசுமதி கீழே விழுந்து தலையில் அடிபட்டு இறந்து போயிருக்கணும். சாவியை அவள் வாய்க்குள்ளே மறைச்சு வைச்சத கண்டுபிடிக்க முடியாமல் சத்தம் இல்லாமல் திரும்பி வந்துட்டான், கம்பவுண்டர் தீனதயாளன். வசுமதியோட சண்டை போட்டதுல அவன் பூசியிருந்த சந்தனம், குங்குமம், விபூதி அவள் உடம்புல ஒட்டிக்க - இப்போ இவன் மாட்டிக் கிட்டான்.''

டாக்டர் சுரேந்திரன் அதிர்ச்சி விலகாத கண்களோடு கேட்டார் - ''அந்த தீனதயாளன் இப்போ எங்கே?''

''கைது செய்துட்டோம். பக்கத்து அறையில்தான் இருக்கான். வாங்க பார்க்கலாம்.''

போனார்கள்.

இரண்டு கான்ஸ்டபிள்களின பிடியில்

தலையைக் குனிந்து கொண்டு நின்றான் தீனதயாளன்.

டாக்டர் அவனை நெருங்கினார்.

தீனதயாளன்... நீயா... இப்படி...? நான் உனக்கு என்ன கெடுதல் பண்ணினேன்... எதுக்காக என்னைக் கொலை செய்ய முயற்சி பண்ணினே?''

தீனதயாளன் கலங்கிய கண்களோடு நிமிர்ந்தான்.

''டா... டாக்டர்...'' குரல் குழறியது.

''சொல்லு...'' டாக்டர் உறும, ரத்தினம் குறுக்கிட்டு சொன்னார் - ''உங்களைக் கொலை செய்ய முயற்சி பண்ணினது அவனில்லை டாக்டர்.''

''பின்னே?''

''சொன்னால் ஆச்சரியப்படுவீங்க டாக்டர்...''

''உம்... சொல்லுங்க இன்ஸ்பெக்டர்.''

இன்ஸ்பெக்டர் ரத்தினம் புன்னகைத்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னார் - ''உ... உங்களைக் கொலை செய்ய முயற்சிபண்ணியது இதய சிகிச்சை நிபுணர் நாராயணன் வீட்டுக்கு எதிர் வீட்டில் இருக்கிற அரியும் அவரோட மனைவியும்.''

டாக்டரின் முகம் வியப்புக்கு போயிற்று.

''அவங்க எதுக்காக என்னைக் கொலை செய்ய முயற்சி பண்ணணும்?''

''சொல்றேன்! தீனதயாளன்கிட்டே கடைசியா அவனும் வசுமதியும் சேர்ந்து மிரட்டின பொண்ணு யாருன்னு விசாரிச்சேன். அரியோட மனைவி பெயரைச் சொன்னான். எனக்கும் பாலகுமாருக்கும் பெரிய அதிர்ச்சி. இவங்க கல்யாணம் ஆகாத பெண்கள்கிட்டதானே கைவரிசையைக் காட்டுவாங்க... அந்த வரிசையில் கல்யாணமாயிட்ட அரியோட மனைவி எப்படி சேர்ந்தான்னு ஆச்சரியப்பட்டோம். நேரா அரி வீட்டுக்குப்



போய் ஒரு அதிரடி விசாரணையை அவங்ககிட்டே நடத்தினோம். உண்மை வெளியே வந்தது.''

''என்ன உண்மை?''

''அரிக்கும் அந்தப் பெண் விமலாவுக்கும் பெத்தவங்க பார்த்துதான் கல்யாணம் பண்ணி வைச்சாங்க. ஆனால் இரண்டு பேரும் கல்யாணத்துக்கு முன்னாடியே நெருக்கமா பழகினதுல விமலா கர்ப்பமாயிட்டாள். அவங்க தாத்தா ஒழுக்கம் கட்டுப்பாடுன்னு கண்டிப்பா இருக்கக்கூடியவர். ஒரு சின்னத் தப்புக்குக்கூட கடுமையா தண்டிக்கக்கூடியவர். கல்யாணத்துக்கு முன்னாடியே கர்ப்ப விசயம் தாத்தாவுக்கு தெரிஞ்சா சொத்து தனக்கு கிடைக்காமல் போயிடுமோ என்கிற பயத்தில் அரியே விமலாவைக் கருக்கலைப்பு பண்ணிக்க உங்க கிட்ட அனுப்பி வைச்சிருக்கார். விமலாவும் வந்து கருக்கலைப்பு பண்ணிட்டு போயிருக்கா. தீனதயாளனும் வசுமதியும் வழக்கம் போல மத்தப் பெண்களைப் போலவே விமலாவையும் மிரட்ட முயற்சி பண்ணியிருக்காங்க. உங்க பேரைச் சொல்லி இவங்க மிரட்டி பணம் பண்ணினதால அரிக்கு உங்கமேல ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டது. உங்க மூலமா என்னிக்காவது உண்மை வெளியே தெரிஞ்சா தாத்தாவோட கோபத்துக்கு ஆளாகி சொத்து கிடைக்காமல் போயிடுமோங்கிற பயத்துல உங்களைத் தீர்த்துக்கட்ட எண்ணி மருத்துவமனைக்கு வந்து கத்தியால் குத்தி கொலை பண்ண முயற்சி செஞ்சிருக்கார். அந்த அரை குறை கொலை முயற்சியில் நீங்க தப்பிச்சுட்டீங்க.''

டாக்டர் சில விநாடிகள் மவுனித்துவிட்டுக் கேட்டார் - ''சரி... சாந்தாவைக் கொலை பண்ணியது யார்? அதுவும் அரியா?''

''இல்லை. சாந்தாவைக் கொலை பண்ணினது தீனதயாளன்.''

"அவளை எதுக்காகக் கொலை செய்யணும்?"

"அங்கேதான் இன்னொரு பயங்கரம் ஒளிஞ்சிட்டிருக்கு."

"இன்னொரு பயங்கரமா?"

"ஆமாம் டாக்டர்! தீனதயாளன் ஒரு மிரட்டல்காரன் மட்டும் இல்லை. இன்னொரு திருட்டு வேலையும் பண்ணிட்டிருந்தான்.

"திருட்டு வேலையா?"

"ஆமா. கண்களைத் திருடற வேலை..."

"இன்ஸ்பெக்டர்... நீங்க என்ன சொல்றீங்க?"

"நகரில் இருக்கிற ஒரு முக்கியமான பணக்கார புள்ளியும் ஒரு புரோக்கரும் சேர்ந்துகிட்டு நிழல் வியாபாரம் ஒண்ணைப் பண்ணிட்டு வர்றாங்க..."

"நிழல் வியாபாரமா?"

"ஆமாம் டாக்டர்! மருத்துவமனையில் யாராவது இறந்து போயிட்டா இறந்து போனவரோட குடும்ப நபர்கள்கிட்ட பேசி ஒரு தொகையை நிர்ணயம் பண்ணி இறந்தவரின் கண்களை எடுக்கிற வேலையை தீனதயாளன் மூலமா அந்த இரண்டு பேரும் செய்து வந்தாங்க. அப்படி எடுக்கப்பட்ட கண்களை அவசர அறுவைக்கு காத்திட்டிருக்கிற சில பணக்கார நோயாளிகளுக்கு நல்ல விலைக்கு வித்துடுவாங்க..."

"அடப்பாவிகளா...!"

"டாக்டர்! நம்ம நாட்டில் கண் தானம் பிரச்சாரம் மிகப்பெரிய அளவில் இருந்தாலும் கண்களை தானம் தர்றவங்க ரொம்ப ரொம்பக் குறைவு. உலக நாடுகளுக்குக் கண்களை சப்ளை செய்யற தேசம் இலங்கை ஒண்ணுதான். இந்தியாவில் முறைப்படி கண்தானம் மூலமா கண்களைப் பெறணும்னா ஆறு ஆண்டு வரை காத்திருக்க வேண்டியிருக்கும். பெரிய பெரிய பணக்காரர்களுக்கு கண்களில் பழுது ஏற்பட்டு பார்வை குறைந்து கொண்டே வந்தால் அவர்கள்



தங்கள் கண்களில் உள்ள 'கார்னியா' பகுதியை அகற்றிவிட்டு இறந்தவர்களின் கண்களில் உள்ள 'கார்னியா' பகுதியை எடுத்து - பொருத்திக் கொண்டு பார்வையை சீராக்கிக் கொள்கிறார்கள்."

டாக்டர் குறுக்கிட்டார்.

"இப்ப புரியுது இன்ஸ்பெக்டர்! பெரிய பணக்காரர்களுக்கு கறுப்புச் சந்தையில் கண்களை விக்கிற வேலையை தீனதயாளன் அன்கோ பண்ணிட்டு வந்திருக்காங்க..."

"அதேதான்."

"சரி, இறந்தவங்களோட கண்களை பேரம் பேசி எடுத்துட்டிருந்த தீனதயாளன் உயிரோடு இருந்த சாந்தாவையும் வசுமதியையும் எதுக்காகக் கொலை பண்ணிக் கண்களை எடுக்கணும்?"

"ஒரு அவசர ஆர்டர்..."

"அவசர ஆர்டரா?"

"ஆமா டாக்டர்."

"ஒரு பெரிய தொழில் அதிபருக்குக் கண்ணுல புண் ஏற்பட்டு பார்வை பறிபோகக்கூடிய அபாயம். அந்தக் கண்களை எடுத்துட்டு வேற கண்ணைப் பொருத்தியே ஆகவேண்டிய கட்டாயம். பணம் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கத் தயார். கண்கள் உடனடியா வேணும். ஒரு ஜோடி கண்ணுக்கு பேசிய தொகை அஞ்சு இலட்சம். அவசரத்துக்கு இறந்தவங்க கண்கள் கிடைக்கலை. தீனதயாளனின் பார்வை உயிரோடு இருக்கிறவங்க பக்கமா போச்சு... அந்த சமயத்துல சாந்தா உங்ககிட்ட காய்ச்சலுக்கு சிகிச்சை எடுக்க வந்தாள். அவள் வீட்டில் தனியாகத்தான் இருக்காங்கிறதை எப்படியோ தெரிஞ்சுகிட்டு இரண்டு நாளைக்கு முன்னாடி இராத்திரி வேளையில் போய் காரியத்தை முடிச்சிருக்கான்."

"நர்சு வசுமதியையும் கண்களுக்காகத்தான்

கொலை பண்ணினானா?''

''இல்லை. உண்டியல் பணத்தை திருட்டுத்தனமா மாற்று சாவி போட்டு எடுக்க வந்த வசுமதியை தீனதயாளன் தடுத்திருக்கான். நடந்த போராட்டத்துல வசுமதி தலையில் அடிபட்டு இறந்துபோகவே இலவசமா கிடைச்ச அவளோட கண்களையும் தோண்டி எடுத்து நல்ல விலைக்கு வித்துட்டான்.''

தீனதயாளனை டாக்டர் சுரேந்திரன் பயமாய் ஒரு பார்வை பார்த்துக் கொண்டே ரத்தினத்திடம் சொன்னார்.

''இன்ஸ்பெக்டர்! இவன் மட்டும் பிடிபடாமே இருந்திருந்தால் உயிரோடு இருக்கிற பலபேரோட கண்கள் காணாமல் போயிருக்கும்.''

''இவன் இவ்வளவு சுலபமா பிடிபடக் காரணமாயிருந்தது யார் தெரியுமா டாக்டர்?''

''யார்?''

''உங்க மருத்துவமனை விநாயகர்.''

''எப்படி?''

''நர்சு வசுமதியோட உடம்பில் விபூதி, குங்குமம், சந்தனத்துகள்கள் ஒட்டாமே இருந்திருந்தால், தீனதயாளனைக் கண்டுபிடிச்சிருக்க முடியுமா?''

''உண்மைதான்! வர்ற ஆண்டு இந்த மருத்துவமனை விநாயகருக்கு வெள்ளிக்கவசம் மாட்டி விநாயக சதுர்த்தியை சிறப்பாக் கொண்டாட வேண்டியதுதான்.''

''மறக்காமே எங்களையும் கூப்பிடுங்க டாக்டர்.''

ரத்தினம் சிரித்துக் கொண்டே சொல்லை -

''கட்டாயம்'' என்றார் டாக்டர் சுரேந்திரன்.

(முடிந்தது)



## வாசகர் கடிதம்




சென்ற க்ரைம் ஸ்பெஷல் 158 'டெட் லைன்' இதழ் ''பேக்ஸ்' பக்கத்தில் ஹார்ட் அண்ட ஷாக் செய்தியைச் சொல்லி அதிர வைத்தார் ஆர்.கே.சார். ஆம், சென்னை சென்ட்ரல் - வியாசர்பாடி ரயில்வே ஸ்டேஷனில் நடைபெற்ற சம்பவத்தைக் காட்டிலும் ஆர்.கே.சார் சொன்ன தகவல்கள், எங்களை அதிர்ச்சி அடைய வைத்தது உண்மை.

-டி.நாகராஜன், வியாசர்பாடி.

நாங்கு நேரிக்கும் வள்ளியூருக்கும் ஊடால நடந்த பேச்சை - மண்வாசனை மாறாம அப்படியே எடிட்டர் ஏரியாவுல எழுதின அசோககு சாரை எப்படிப் பாராட்டுறதுன்னு தெரியாம முழிக்கிறேங்க. எனக்கும் 'ஒரு மரத்துக் கள்'ள இல்ல... ஒரு குல பச்ச நுங்க பதமா அனுப்பிச்சவச்சா நல்லா இருக்குமுங்க.

-இ.இளமாறன், கிழக்குத் தாமபரம்.

நாவலுக்குள் நுழையுமுன் படிக்கச் சொன்ன பத்துப பககஙகளுமே பிரமிப்பாக இருந்தது. நாவலைப் படிக்கும் ஆவலை சடடென்று தூண்டிவிட்டது. பாராட்டுகள்.

-எம்.தயாளன், கோவை.

எனக்கு நாவல்கள் படிக்க அதிக பிரியம். நான் சென்னையிலிருந்து கல்கண்டு, ராணிமுத்துவுக்கு வருட சந்தா அனுப்பி நேரடியாக புத்தகம் வரவழைக்கிறேன். அதுபோலவே தங்கள் க்ரைம் நாவல் புத்தகமும் வரவழைக்க விரும்புகிறேன். தயவு செய்து க்ரைம் நாவலுக்கு வருட சந்தா எத்தனை ரூபாய் என்று தெரியப்படுத்தவும். நான் உங்களுக்கு பணம் மணியார்டர் செய்கிறேன். எனக்கு வாராவாரம் க்ரைம் நாவல் அனுப்பி வையுங்கள். நான் போன வாரம் பரோடா போயிருந்த போது அங்கிருந்த ஒரு தமிழ் பையன் கடையில ராஜேஷ்குமாரின் 4 க்ரைம் நாவல்கள் வாங்கி வந்தேன். 'பாய்ந்து வா விவேக்', 'சம்மர் ஸ்பெஷல்' 'இலவசம் ஒரு வானவில்' எல்லாம் மிக அருமையான நாவல்கள். அதனால் தொடர்ந்து படிகக ஆசைப்படுகிறேன். கடிதம் கிடைத்ததும் சந்தா விவரம் தெரிவிக்கவும்.

- வனஜா நாராயணன், அஹமதாபாத்.